Registered as a News Paper in Ceylon ★ விலை: சதம் 15

போன்: 7199
பொ. அம்பலவாணர்
தங்க வைர
நகை வியாபாரம்
119, கஸ்தூரியார் ரோட்,
யாழ்ப்பாணம்.

ஈழநாடு
EELA NADU
National Tamil Daily
தேசிய தினசரி
தபால் பெட்டி எண். 49 போன்: 389

அல்கத்தீன் பைப்புகள்
S-LON P.V.C.
பைப்புகள்
கல்வனைஸ்ட் பைப்புகள்
மலிவான விலையில்
கிடைக்குமிடம்:-
கதிர்ஹாட்வெயர்ஸ்
11/1, ஸ்ரான்லி வீதி
யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 7130
தந்தி: KATHIR

மலர் 13 ஆனி 11 ஜ:அவ் (25—6—71) வெள்ளிக்கிழமை இதழ் 133

# பௌத்த குருமாருக்கு தனிப் பல்கலைக்கழகம்

## பிரிவேனுபற்றி ஆராய்ந்த குழு சிபார்சு

கோட்டை, வியா

பௌத்த குருமாருக்கு தனியான பல்கலைக் கழகம் அமைக்கப்பட வேண்டுமென பிரிவேனு கல்வி பற்றி ஆராய்ந்த குழு சிபார்சு செய்துள்ளது.

பிரிவேனுக் கல்விபற்றி ஆராய நியமிக்கப்பட்ட குழு தனது அறிக்கையை இன்று கல்வி அமைச்சர் டாக்டர் பதியுதீன் மஃமூதிடம் சமர்ப்பித்துள்ளது!

இக்குழு தனது அறிக்கையில் பௌத்த குருமாருக்கென தனியாகப் பல்கலைக் கழகம் அமைக்கப்படவேண்டுமென்றும் அனுராதபுரத்தில் உள்ள புத்த தர்மநிலையத்தை பல்கலைக்கழக நிலையமாகமாற்றி அங்கு திரிபிடகம் மற்றும்பௌத்த தியானமுறை போதிக்கப்பட வேண்டுமென்றும் சிபார்சு செய்துள்ளது இந்தப்பயிற்சி நிலையத்தை நிர்வகிக்கவும் தன்னாட்சிசெய்யவும் ஒருசபை நிறுவப்பட வேண்டுமென்றும் இதற்கான செலவை அரசாங்கம் அளிக்க வேண்டுமென்றும் அந்த அறிக்கையில் சிபார்சு செய்யப்பட்டிருக்கிறது

பொதுமக்கள் பார்வைக்காக இந்த அறிக்கை வெளியிடப்படுமென அமைச்சைச் சேர்ந்த அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

நாட்டில் இப்பொழுது 198 பதிவு செய்யப்பட்ட பிரிவேனுக்கள் இருப்பதாக அந்த அதிகாரி மேலும் தெரிவித்தார்

......

### இன்று

வண்ணை ஸ்ரீ வைத்தீஸ்வரன் ஆலயத்தில் சுக்கிரவாரமாகிய இன்று மாலை 6—7 மணிவரை திருப்பூங்குடி வி. க. ஆறுமுகம் அவர்களால் கந்தபுராண விரிவுரைத் தொடரில் 'நாட்டுப் படலம்' என்னும் பொருள் பற்றிய கதாப்பிரசங்கமும் இரவு 7 மணிக்கு சுக்கிரவார அம்மன் உற்சவமும் நடைபெறும்.

### ஊரடங்கு நேரம்

இரவு 10-00 மணி முதல் காலை 4-00 மணி வரை

## அரசியல் நிர்ணய சபையில்

### பிறின்ஸ் - விவியன் வாக்குவாதம்

கொழும்பு. வியாழன்

சட்டவாக்க மொழிபற்றி அடிப்படைத் தீர்மானம் இன்றுகாலை அரசியல் நிர்ணய சபைக்கூட்டத்தில் விவாதத்துக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோது கணிசமான அளவுகாரசாரமான வாக்குவாதம் ஏற்பட்டது. திரு பிறின்ஸ் குணசேகராவுக்கும் திருமதி விவியன் குணவர்த்தனாவுக்குமிடையில் ஒருகட்டத்தில் நேரடியாகவே வாக்குவாதம் ஏற்பட்டது

'சட்டங்கள் சிங்களத்தில் ஆக்கப்படவேண்டும்' என்ற அடிப்படைத் தீர்மானத்துக்கு 'சிங்களத்தில் மாத்திரம்' என்று திரு பிறின்ஸ் குணசேகரா திருத்தம் கொண்டுவந்திருந்தார்

இத் திருத்தத்தை ஆளும் கட்சியைச்சேர்ந்த பெரும்பாலான உறுப்பினர்கள் எதிர்த்தனர்

இத் திருத்தம் வாக்கெடுப்புக்கு விடப்பட்டபோது திரு பிறின்ஸ் குணசேகராவும் மற்றும் ஆளும் கட்சியைச்சேர்ந்த இரு உறுப்பினர்களும் ஆதரித்து வாக்களித்தனர் மகியங்கனை எம் பி எட்வின் விக்கிரமரத்தின, களனெவெல எம் பி ஆர் பி இரத்தினமாலா ஆகியோர் ஆதரித்தனர் 41 ஆளும்கட்சி உறுப்பினர்கள் இதை எதிர்த்து வாக்களித்தனர்

ஒரு கட்டத்தில் திரு விவியன் குணவர்த்தனவைப் பார்த்து சம அந்தஸ்துக்கு ஆதரிக்கிறீர்கள் என்று திரு பிறின்ஸ் குணசேகரா குற்றம்சாட்ட கற்பனை எதிரிகளிடமிருந்து சிங்களத்தைக் காப்பாற்றப் பார்க்கிறார்' என்று திருமதி விவியன் பதிலுக்குப் பேசினார்.

திரு எஸ் ஜே வி செல்வநாயகத்தின் பெயரிலிருந்த திருத்தப் பிரேரணையைப் பிரேரித்து பண்டிதர் கா. பொ இரத்தினம் பேசுகையில் 1956-ம் ஆண்டில் சிங்களம் அரசகருமமொழி ஆக்கப்பட்டதிலிருந்து தமிழ் மக்கள் அதனை எதிர்த்து வந்திருக்கின்றனர் இப்பொழுதும் அதனை தமிழ் மக்கள் எதிர்த்தே வருகின்றனர். காலஞ்சென்ற பண்டாரநாயக்கா இந்தியா சபையில் தொழில் விவகாரம் பற்றிப் பேசுகையில் நாட்டின் ஜனத்தொகையில் 80 சதமானோரின் மொழியான சிங்களத்தை தேசிய மொழியாக மக்கள் ஏற்றுக் கொண்டுள்ளனர். அதனால் அரசாங்கம் சிங்களத்தை அரசகரும மொழியாக்கும்

(6ம் பக்கம் பார்க்க)

## யாழ்ப்பாணத்தில் 3 தினங்களில் 3 கொலை!

### அடையாளம் காணப்படாத நிலையில் சடலங்கள்

குருநகர், வெள்ளி

தொண்டமானாறு சந்திக்கு அண்மையிலுள்ள மடமொன்றில் நேற்று இறந்து கிடக்கக் காணப்பட்ட ஒரு வாலிபரின் சடலம் பொலிசாருக்கு பெரும் தலையிடியைக் கொடுத்துள்ளது. வல்வை இந்திராணி ஆஸ்பத்திரியில் பொதுமக்களின் பார்வைக்காக இச்சடலம் வைக்கப்பட்டுள்ள போதிலும் இதுவரை அச்சடலத்தை எவரும் அடையாளம் காணவில்லை.

கையில் மோதிரங்களும் பணமும் இருக்கக் காணப்பட்டது. சடலத்துக்கு அருகில் நச்சுத்திராவகப் போத்தல் ஒன்றும் கிடந்தது. 28 வயது மதிக்கத்தக்க இவ் வாலிபரின் மரணம் ஒரு கொலை எனச் சந்தேகிக்கப்படுகிறது. வல்வெட்டித்துறைப் பொலிசார் விசாரணையில் ஈடுபட்டுள்ளனர்.

### புன்னாலைக்கட்டுவனில்

புன்னாலைக்கட்டுவனில் கிணறு ஒன்றில் சிதைந்த நிலையில் சிசு ஒன்று இறந்து கிடக்கக் காணப்பட்டது. பிறந்தவுடனேயே இச்சிசுவின் கழுத்தை நெரித்துக் கொலை செய்யப்பட்டுள்ளதாக நம்பப்படுகிறது. உடம்பில் இரத்தமும் காணப்பட்டதாகப் பொலிசார் தெரிவித்தனர்.

இச்சிசுவின் கொலையில் சம்பந்தப்பட்ட வர்களைப் பொலிசார் தேடுகின்றனர். இதுவரை எவரும் கைது செய்யப்படவில்லை; வல்வெட்டித்துறைப் பொலிசார் விசாரணையில் ஈடுபட்டுள்ளனர்.

### எழுதுமட்டுவாளில்

எழுதுமட்டுவாளில் ஒட்டுவெளி என்னுமிடத்தில் கடந்த சில தினங்களுக்கு முன்னர் இறந்துகிடக்கக் காணப்பட்டவரின் சடலத்தை அடையாளம் கண்டு கொள்ளாத நிலையில் அவரது தலை கொழும்புக்கு இரசாயன பரிசோதனைக்காக அனுப்பி வைக்கப்பட்டுள்ளது

கொலை எனச் சந்தேகிக்கப்படும் இந்தச்சடலத்தின் இரு கைகளிலும் நூல் கட்டப்பட்டுள்ளது. அரையிலும் அதே மாதிரியான நூல் கட்டப்பட்டுள்ளது. அரையிலுள்ள நூலில் ஒரு பித்

(6-ம் பக்கம் பார்க்க)

## யாழ். ஆஸ்பத்திரிக்கு வைத்திய நிபுணர்கள் நியமிக்கப்படுவர்

யாழ்ப்பாணம், வெள்ளி

யாழ்ப்பாணம் பெரியாஸ்பத்திரியில் காலியாக இருக்கும் வைத்திய நிபுணர்களின் இடங்களுக்கு இம்மாத இறுதிக்குள் வைத்திய நிபுணர்கள் நியமிக்கப்படுவார்கள். சுகாதார அமைச்சர் இவ்வாறு அறிவித்திருப்பதாக யாழ். நகரமேயர் திரு அல்பிரட் துரையப்பா நேற்று நடந்த யாழ் மாநகரசபையின் மாதாந்தக் கூட்டத்தில் தெரிவித்தார்

ஆஸ்பத்திரிகளில் நோயாளர்களைப் பார்வையிடும் நேரம் முன்னர் இருந்தபடி அடுத்தமாதம் முதல் திகதியிலிருந்து அமுலுக்குகொண்டுவரப்படுமெனவும் சுகாதார அமைச்சர் அறிவித்திருப்பதாக மேயர் துரையப்பா தெரிவித்தார்.

### புதிய சந்தையைத் திறக்க அமைச்சரை அழைக்கமுடிவு

யாழ். நகரில் அமைக்கப்பட்டு முடிவடைந்துவரும் நவீன மக்கள் சந்தையைத் திறந்துவைப்பதற்கு உள்நாட்டு, [illegible] அமைச்சர் திரு பி இலங்கரத்தினவை அழைக்க வேண்டுமென திரு சே. எஸ் நடராசா கொண்டுவந்த பிரேரணை [illegible] நிறைவேறியது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வரி விளம்பரம்

### வாடகைக்கு

No. 5 றக்கா வீதியில் 1-7-71 முதல் சகல வசதிகளுடன் கூடிய ஒரு பகுதி வீடு வாடகைக்கு உண்டு. விபரங்களை மேற்படி விலாசத்தில் அறிந்துகொள்ளலாம். 3207

### விற்பனைக்கு

2 ஏக்கர் நெற்காணி செம்டியகுறிச்சி பூநகரியில் வீதிக்கும் ஐந்து பிரதான வீதாபனங்களுக்கும் அருகில் விற்பனைக்கு உண்டு. தொடர்பு கொள்ளவும். மு. செல்லையா, 18/3, சுவாமியார் வீதி, கொழும்புத்துறை 3208


## புதிய கணக்காளர்

யாழ்ப்பாணம், வெளிவட்டமாநிலக் கல்வித் திணைக்களத்தின் புதிய கணக்காளராக புகையிரதத் திணைக்களத்திக் கணக்காளராக இருந்த திரு. எஸ். இராசையா நேற்று முதல் பதவி ஏற்றுள்ளார். கணக்காளர் திரு. மு. நல்லையா பதவியுயர்வுடன் இடமாற்றம் பெற்றதையடுத்து இவர் இங்கு மாற்றப்பட்டார்.


## விளம்பரம்

### கூட்டுறவுப் பணியாளர் தேவை

திருநெல்வேலி ப. நோ. கூ. சங்கம்

ஈழநாட்டுப்பத்திரிகையில் இம்மாதம் 17-ம் திகதி விளம்பரம் செய்த பணியாளர் விண்ணப்பத்தை ஒட்டி மேலும் ஒரு சலுகை வழங்கப்பட்டுள்ளது. அதாவது "கூட்டுறவுச் சேவையில்" அனுபவம் உள்ளவர்கள் விண்ணப்பிக்கலாம்.

மேற்படி விண்ணப்பம் செய்ய உரிமையுள்ளவர்கள் மட்டும் இதுவரை விண்ணப்பிக்காவிடில் 30-6-71 பிற்பகல் 2 மணிக்கு முதல் விண்ணப்பிக்கவும். அத்தாட்சிப்பத்திரப் பிரதிகள் அனைத்தும் அத்துடன் அனுப்பவேண்டும்.

என், குமாரசுவாமி,
தலைவர்.

போ. சண்முகம்,
பொதுமுகாமையாளர்.

திருநெல்வேலி
பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம்,
திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்,
24-6-71.

2866


## இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்

### வெள்ளி 25—6—71

344 மீ அல்லது 61 மீ.

காலை 6-00 நாதாஞ்சலி, 6-10 சைவநற்சிந்தனை, 6-15 இஸ்லாமியநற்சிந்தனை. 6-20 கீதிப்பாடல்கள், 7-00 பண்ணுமிந்தமிழ், 7-30 திரைகானம், 8-00 இஸ்லாமிய கீதங்கள்.

344 மீ அல்லது 49 மீ.

பகல் 12-00 நண்பகல் இசை, 1-00 கதம்பஇசை,

344 மீ. அல்லது 61 மீ.

மாலை 4-30 கல்வி ஒலிபரப்பு, 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-15 ஓடிவிளையாடுபாப்பா, 5-45 கல்விச்சேவை.

இரவு 6-10 இடைவேளை இசை, 6-15 வயலின், 6-30 துதிப்பாடல்கள், 7-00 பழம்சுவைகள், 7-15 பாட்டு, 7-45 நாடகம், 8-00 முஸ்லிம் நிகழ்ச்சி, 9-30 உரை நிகழ்ச்சி, 10-00 நேயர் விருப்பம், 10-30 செய்தித் தொகுப்பு.

—

## ஸ்ரீ ல. சு. கட்சி அரியாலைக்கிளை

குருநகர், வியாழன்

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி அரியாலைக்கிளை விலவந்தெரு திர்வாகிகளாகப் பின்வருவோர் தெரிவுசெய்யப்பட்டனர்.

போஷகர் திரு. அல்பிரட் சி. துரையப்பா உப போஷகர் திரு. தம்பு சந்தையா எம். எம். வி. தலைவர்: நா அருளானந்தம், உபதலைவர் தம்பு மயில்வாகனம் காரியதரிசி: க மகேஸ்வரன் தனாதிகாரி க. சண்முகரத்தினம் உபதனாதிகாரி கே. நடேசலிங்கம் வரன், க. சோமசேகரம் 6 பேர் கொண்ட நிர்வாக சபையும் தெரிவுசெய்யப்பட்டது.

## வேலணையில் சைவப் புலவர்கள் மகாநாடு

வேலணை, வியா.

அகில இலங்கைச் சைவப் புலவர் சங்க சைவ மாநாடும் பட்டமளிப்பு விழாவும் இம்முறை வேலணையில் நடைபெறும். மேற்படிசங்க நிர்வாகச் சபைக் கூட்டத்தில் இத் தீர்மானம் எடுக்கப்பட்டது.

மாநாட்டை முன்னிட்டு சைவசமய நாடகப்போட்டி திருமுறைப் பண்ணிசைப் போட்டி நடத்துவதென்றும், சென்னை சைவசித்தாந்த மகாசமாசத்தின் சைவப்புலவர்கள்வரலாற்று நூல் ஒன்றை வெளியிடுவதென்றும் முடிவு செய்யப்பட்டது.

விழாக்குழு உறுப்பினர்களாகப் பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர்: வித்துவான் சைவப் புலவர் வ செல்லையா.

இணைச்செயலாளர்கள்: சைவப்புலவர் வைத்தியர் க. சிற்றம்பலம், சைவப்புலவர் மு. திருஞானசம்பந்தபிள்ளை

நிதிக்குழு பொருளாளர்: சைவப்புலவர் பண்டிதை செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி,

நிதிக்குழு செயலாளர்: சைவப்புலவர் சி. திருநாவுக்கரசு சைவப்புலவர் வரலாற்று மலர் பொறுப்பாளர்: சைவப்புலவர் சித்தாந்த பண்டிதர் இ செல்லத்துரை கலைப்போட்டிப்பணி அமைப்பாளர் சைவப்புலவர் க செல்லத்துரை, பிரசாரச் செயலாளர்கள்: சைவப்புலவர் நா. விஸ்வலிங்கம். இளஞ்சைவப் புலவர் செ, குணபாலசிங்கம்.

விழாவின்போது பேச்சாளராக தென்இந்தியத் திருக்குறள் பீடாதிபதி அழகரடிகளை அழைப்பதென்றும் தீர்மானிக்கப்பட்டது. விழாவை ஜூலை மாதத்தில் நடத்த ஒழுங்குகள் மேற்கொள்ளுவதாக ஆலோசிக்கப்பட்டது

## கூட்டுறவு பரிசோதகர்

காரைவற்றுறை, வியாழன்

காரைவற்றுறைப்பகுதி கடற்றொழில் கூட்டுறவுப்பரிசோதகராக திரு கே தேவராசா நியமிக்கப்பட்டுள்ளார்.

## அனுதாபத் தீர்மானம்

வேலணை, வியாழன்

வேலணை ஆரம்ப ப. நோ கூ சங்கத்தின் விசேஷ கூட்டம் இன்று நடைபெற்ற போது, ஐக்கிய சங்க பரிசோதகரும் வேலணை ஆரம்ப ப நோ கூ சங்க நிர்வாக நெறியாளரும் செயலாளருமாகிய திரு சண்முகரெத்தினம் சடுதி மரணம் குறித்து இருநிமிஷ நேரமௌன அஞ்சலி செலுத்தப்பட்டது அவரது குடும்பத்தினருக்கு அனுதாபம் தெரிவிக்கும் தீர்மானமும் நிறைவேற்றப்பட்டது

## மின்சாரம் தாக்கி மரணம்

வல்வெட்டித்துறை, வியாழன்

கரணவாய் வடக்கைச் சேர்ந்த வே. வயிரமுத்து என்னும் (67 வயது) தொழிலாளி வேலைசெய்துகொண்டிருக்கும்பொழுது மின்சாரம் தாக்கி மரணமானார். இவர் நெல்லியடியிலுள்ள ஒரு தொழில் ஸ்தாபனத்தில் தொழிலாற்றிக் கொண்டிருந்தார். சம்பவம் நிகழ்ந்த சமயம் இவர் மின்சாரத்தில் இயங்கும் இயந்திரத்தில் வேலைசெய்தார்.

பிரேதபரிசோதனை செய்த டாக்டர் திரு சிதிரங்கம் சாட்சியமளித்தபின் மரண விசாரணை அதிகாரி திரு. வி. பி சுந்தரலிங்கம் மின்சார விபத்தினால் ஏற்பட்ட மரணம் எனத் தீர்ப்பளித்தார்.


ராணி (யாழ்ப்பாணம்)
காலை 10-30 பி. ப. 2-00 மாலை 5-30
ரவிச்சந்திரன் - லட்சுமி
தங்கவேலு - விஜயஸ்ரீ
நடித்த
ஜீவநாடி

மனோகரா (யாழ்ப்பாணம்)
தினசரி காலை 10-30, பி. ப. 2. மாலை 5.30
முத்துராமன் — லக்ஷ்மி,
நாகேஷ் — ராகினி
நடித்த
நவக்கிரகம்

வின்ஸர் — யாழ்ப்பாணம்
காலை 10-30 பி.ப.2-00 மாலை 5-30
ஜி.என்.பாலசுப்பிரமணியம்
எம். எஸ். சுப்புலக்ஷ்மி
கிருஷ்ணன் - மதுரம் - துரைராஜ்
நடித்த
சகுந்தலை

வெலிங்டன் யாழ்ப்பாணம்
தினசரி காலை 10-00, பி. ப. 1-45, மாலை 5-30 மணி
★ சிவாஜிகணேசன்
★ ஜெமினி கணேசன்
★ சாவித்திரி
நடித்த
பாசமலர்

கிங்ஸ்லி (கொழும்பு) பிளாஸா
திரைகளில்
★ சிவாஜிகணேசன் ★ வாணிஸ்ரீ
முத்துராமன்-சோ-மனோரமா குமாரி சச்சு
நடித்த
நிறைகுடம்

ராஜா (யாழ்ப்பாணம்)
தினசரி 10-30, 2-00, 5-30
சிவாஜி—பானுமதி
நடித்த
அறிவாளி

நாகம்ஸ்சினிமா
சுன்னாகம்
தினசரி பி. ப 2-00, 5-45
எம்.ஜி.ஆர். - சரோஜாதேவி
நடித்த
குடும்பத்தலைவன்

வெஸ்லிசினிமா
மானிப்பாய்
தினசரி பி ப 2-30, 6-00
எம்.ஜி.ஆர் - ஜெயலலிதா
நடித்த
கண்ணன் என் காதலன்

ஸ்ரீ காலிங்கன்
இணுவில்
தினசரி பி.ப 2-30, 5-30
எம்.ஜி.ஆர். - அஞ்சலிதேவி
நடித்த
சக்கரவர்த்தித் திருமகள்

றீகல் — யாழ்ப்பாணம்
தினசரி காலை 10-30
பி .ப. 2-30
M. G. R, சாவித்திரி
P. S. வீரப்பா
நடித்த
மகாதேவி
(புதிய பிரதி)
Daily 6-00 p m
Raquel Welch
in
FLARE UP
(Color)

அபிஷேகத் திரவியங்கள்
சந்தனக் குழம்பு
(மைசூர், அவுஸ்திரேலியா, சந்தனக் கட்டைகளால் தயாரிக்கப் பெற்றவை)
★ பழனி வாசனை விபூதி
★ அபிஷேக குங்குமம்
★ பஞ்சாமிர்த சாமான்கள்
★ நைவேத்திய சாமான்கள்
★ அஷ்ட பந்தன மருந்து
வாசனை மிகுந்த தெய்வீக மணம் கமழும்
★ "ராதா" பத்மினி ஜவ்வாது பத்தி
★ 99 & 999 ஜவ்வாது பத்தி
★ சக்தி, பூஜா அகர் பத்திகள்
விளைவு சூடம், சாம்பிராணி
மற்றும்
கோவில் தேவைகளுக்கான
சகலவிதமான சாமான்களும் நிதானமான
விலையில் எம்மிடம் பெற்றுக் கொள்ளலாம்
எஸ். சுப்பிரமணியம்
அன் கொம்பனி
53, கே. கே. எஸ். றோட், பெரியகடை, யாழ்ப்பாணம். போன்: 541 Residence: 7068
"பாலேந்திரா பில்டிங்" 160. செட்டியார் தெரு கொழும்பு-11. போன்: 35825


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாகிஸ்தானுக்கான ராணுவ உதவி

# யு. எஸ். கொள்கை பற்றி மறுபரிசீலனை நடக்கிறதாம்

## அபிவிருத்தி உதவிகளை நிறுத்த பிரிட்டன் முடிவு

நியூயோர்க், ஜூன். 24

**பாகிஸ்தானுக்கு ராணுவ ஆயுதங்கள் விற்பது பற்றிய கொள்கையை அமெரிக்கா மறு பரிசீலனை செய்து வருகின்றது**

**பாகிஸ்தானுக்கு ஏற்கனவே இரு கப்பல்களில் அமெரிக்க ஆயுதங்கள் அனுப்பப்பட்டுள்ளது பற்றி இந்திய அரசாங்கம் கவலையும் அதிர்ச்சியும் தெரிவித்திருக்கின்றது.**

**கிழக்கு வங்காளத்தில் மாமூல் நிலைமை ஏற்படும் வரை பாகிஸ்தானுக்கு அபிவிருத்தி உதவிகள் எதுவும் வழங்குவதில்லையென்று பிரிட்டிஷ் அரசாங்கம் முடிவு செய்திருக்கின்றது.**

பாகிஸ்தானுக்கு ஆயுதங்கள் விற்பனை செய்வது பற்றிய கொள்கையை அமெரிக்க அரசாங்கம் மறு பரிசீலனை செய்து வருவதாக அமெரிக்க உயர்தர அதிகாரி ஒருவர் தெரிவித்தார். பாகிஸ்தானுக்கு ஏற்கனவே இரண்டு கப்பல்களில் அமெரிக்க ஆயுதங்கள் அனுப்பப்பட்டிருப்பது பற்றிய செய்திகள் வெளிவந்ததைத் தொடர்ந்தே இந்த மறு பரிசீலனை நடைபெறுகின்றது என்பது பற்றி அவர் ஒன்றும் கூற மறுத்துவிட்டார். கராச்சி நோக்கி சென்று கொண்டிருக்கும் இரு கப்பல்களும் திருப்பி அழைக்கப்படுமா என்பது பற்றியும் அவர் ஒன்றும் கூறவில்லை. பாகிஸ்தானுக்கு ஆயுதம் விற்பது சம்பந்தமான கொள்கையில் ஏதோ குறைபாடு இருப்பது தெரிய வந்துள்ளதாகவும் அந்த அதிகாரி குறிப்பிட்டுள்ளார்.

### இந்தியாவில் அதிர்ச்சி

கிழக்குப் பாகிஸ்தானில் பாகிஸ்தான் ராணுவ ஆட்சியாளர் தாக்குதல் ஆரம்பித்த பின்னர் அமெரிக்காவிலிருந்து இரண்டு கப்பல்களில் ஆயுதங்கள் கராச்சிக்கு அனுப்பப்பட்டிருப்பதாக கூறப்படுவது குறித்து இந்திய அரசாங்கம் பெரும் அதிர்ச்சி யடைந்திருக்கின்றது. பாகிஸ்தானுக்கு ஆயுதம் வழங்குவது சம்பந்தமாக பாரதத்துக்கு அமெரிக்கா கொடுத்த வாக்குறுதிகள் மீறப்பட்டுள்ளதாக இந்திய அதிகாரிகள் கூறினர்.

அமெரிக்க தூதரகப் பொறுப்பதிகாரி நேற்று இந்திய வெளிஉறவு அமைச்சகத்துக்குச் சென்று பேச்சுவார்த்தைகள் நடத்தினார். இந்தியாவுக்கு கொடுக்கப்பட்ட வாக்குறுதியெதுவும் மீறப்படவில்லையென்று அவர் தெரிவித்தார்.

### ஆர்ப்பாட்ட ஊர்வலம்

பாகிஸ்தானுக்கு அமெரிக்க ஆயுதங்கள் அனுப்பப்பட்டிருப்பது சம்பந்தமாக எதிர்க்கட்சிகளைச் சேர்ந்த சுமார் 20 ஆட்சி மன்ற உறுப்பினர்கள் புதுடில்லியிலுள்ள அமெரிக்க தூதரகத்துக்கு ஊர்வலமாகச் சென்று ஆர்ப்பாட்டம் நடத்தினார்கள். கராச்சி நோக்கிப் போய்க்கொண்டிருக்கும் இரு அமெரிக்க கப்பல்களையும் வழிமறிக்க வேண்டும் என்று இவர்கள் வற்புறுத்தினார்கள். எதிர்க்கட்சிகளைச் சேர்ந்த தலைவர்கள் வாச்பாயி, மிஸ்ரா, மதுலிமாயி போன்றவர்கள் இந்த ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டார்கள்.

காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த 12 எம். பிக்கள் விடுத்துள்ள ஓர் அறிக்கையில் இந்த ஆயுத உதவி கிழக்குப் பாகிஸ்தானில் இடம் பெற்றுவரும் இனக்கொலைகளுக்கு இது மேலும் ஆதரவும் ஊக்கமும் அளிப்பதாகும். பாகிஸ்தானுக்கு அமெரிக்க ஆயுதங்கள் கப்பல்களில் போய்க்கொண்டிருப்பது சம்பந்தமாக அமெரிக்க செனட்டர் ஒருவர் வெளியிட்டுள்ள அறிக்கையொன்றில் இது அமெரிக்க வெளியுறவு அமைச்சின் அறியாமையை அல்லது ஏமாறிப்போன தன்மையைத்தான் காட்டுகிறது எனக் கூறியுள்ளார்.

### பிரிட்டிஷ் உதவி இல்லை

கிழக்கு வங்காளத்தில் அமைதி திரும்பி வழமையான நிலைமை மீண்டும் திரும்பும் வரையில் பாகிஸ்தானுக்கான அபிவிருத்தி உதவிகள் யாவற்றையும் நிறுத்த முடிவுசெய்திருப்பதாக பிரிட்டிஷ் வெளி உதவி அமைச்சர் சேர் அலக்ஸ் டக்ளஸ் ஹியூம் தெரிவித்திருக்கிறார்.

கிழக்குப் பாகிஸ்தானில் அமைதியை மீண்டும் நிலைநிறுத்தவேண்டிய அவசியத்தை ஜெனரல் யாஹ்யாகானுக்கு பிரிட்டிஷ் அரசாங்கம் உணர்த்தியிருப்பதாகவும் சேர் ஹியூம் தெரிவித்தார்.

### பாரதத்துக்கு மேலும் உதவி

பாரதத்தில் வந்து குவிந்துள்ள அகதிகளின் நிவாரணத்துக்கென பிரிட்டன் மேலும் 50 லட்சம் பவுண் கொடுத்துதவ முடிவுசெய்திருக்கின்றது. ஐ. நா. பொதுச் செயலாளர் யுதாண்டின் வேண்டுகோளின் பேரில் [illegible] 10 லட்சம் [illegible]

பிரிட்டன் தீர்மானித்திருக்கின்றது. இந்த தகவலை சேர் ஹியூம் காமன்ஸ் சபையில் வெளியிட்டார்.

விண்வெளியில்

## சோவியத் — அமெரிக்க கூட்டுப் பரிசோதனை?

நியுயோர்க், ஜூன் 24

விண்வெளியில் பறக்கும் கலங்களை இணைத்துப் பரிசோதனை நடத்துவது சம்பந்தமாக அமெரிக்க விஞ்ஞானிகளுக்கும் சோவியத் விஞ்ஞானிகளுக்குமிடையில் இணக்கம் ஏற்பட்டிருக்கின்றது.

விண்வெளி ஆராய்ச்சியில் இருநாடுகளும் ஒத்துழைப்பது சம்பந்தமாக அமெரிக்காவில் இரு நாடுகளின் விஞ்ஞானிகள் குழுக்களுக்கிடையில் பேச்சுவார்த்தைகள் நடைபெற்றுவந்தன. இப்பேச்சுவார்த்தைகளில் நல்ல முன்னேற்றம் ஏற்பட்டிருப்பதாக இப்பொழுது கருதப்படுகின்றது.

விண்வெளியில் இருநாடுகளின் கலங்களையும் இணைத்துப் பரிசோதிக்கும் முயற்சிகள் இன்னும் சில ஆண்டுகளில் மேற்கொள்ளப்படலாமென்று கருதப்படுகின்றது.

இதேசமயம் தற்பொழுது விண்வெளியில் சுற்றிக் கொண்டிருக்கும் சல்யூட் கலத்திலிருக்கும் சோவியத் வீரர்கள் புதிய சாதனை ஒன்றை நிகழ்த்தியுள்ளார்கள். அவர்கள் இதுவரை 18 நாட்கள் விண்வெளியில் இருந்துள்ளனர் எடையற்ற நிலையில் இத்தனை நாட்கள் விண்வெளியில் இவர்கள் மாத்திரமே இருந்திருக்கிறார்கள். இன்னும் பல நாட்கள் விண்வெளியில் இவர்கள் தங்கக்கூடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

காவிரிநீர்ப்பிரச்னை

# தமிழ் நாடு முழுவதும் 27-ம் திகதி கண்டனக் கூட்டங்கள்

## டில்லியில் எம். பிக்கள் ஆர்ப்பாட்டம் செய்வர்

சென்னை, ஜூன் 24

தமிழ் நாட்டில் இம்மாதம் 27ம் திகதி மத்திய அரசுக்கு எதிராக கண்டனக் கூட்டங்கள் நடத்தப்படும் காவிரி ஆற்றுநீர் பங்கீடு சம்பந்தமாக மத்திய அரசு காட்டும் மந்தப்போக்கினை எதிர்த்து தமிழகத்திலுள்ள சகல கட்சிகளும் ஒருமித்த முறையில் இந்தக் கண்டனக் கூட்டங்களை நடத்த விருக்கின்றன. காவிரி நீர்ப்பிரச்னை சம்பந்தமாக ஆராய முதல்வர் திரு. கருணாநிதி அண்மையில் நடத்திய அனைத்துக் கட்சிக் கூட்டத்தில் இதற்கான முடிவு எடுக்கப்பட்டது.

தமிழகத்தைச் சார்ந்த ஆட்சிமன்ற உறுப்பினர்கள் அனைவரும் கட்சி சார்பற்ற முறையில் இம்மாதம் 27-ம் திகதியன்று டில்லியில் தலைமை அமைச்சர் இந்திராவின் இல்லத்திற்கு அமைதியான முறையில் ஊர்வலமாகச் சென்று முறையீடு ஒன்றை பிரதமரிடம் தருவதென்றும் கூட்டத்தில் முடிவெடுக்கப்பட்டது.

காவிரி ஆற்றுநீர்ப் பிரச்சினை சம்பந்தமாக விவாதிக்க தமிழ்நாடு முதலமைச்சர் கருணாநிதி இங்கு கோட்டையில் சர்வகட்சித் தலைவர்கள் கூட்டத்தைக் கூட்டி விவாதம் நடத்தினார்.

காங்கிரஸ் கட்சியைச் சார்பில் சட்டசபை காங்கிரஸ் தலைவர் பொன்னப்ப நாடாரும் மேலவை எதிர்க்கட்சித் தலைவர் கே. ராஜாராம் நாயுடுவும் இக் கூட்டத்தில் [illegible] அமைச்சர்கள், அன்பழகன், சாதிக் பாட்சா, மாதவன், மற்றும் டாக்டர் ஹண்டே எஸ் எஸ் ராமசாமி படையாச்சி கே. டி. கே. தங்கமணி ஏ ஆர். பெருமாள், திவாகரராஜன், ஜொய்தீன், அப்துல் வஹாப் ஏ ஆர். தாமோதரன், ஆறுமுகசாமி, ஏ ஆர். மாரிமுத்து டி கே. சண்முகம் ஆகிய சர்வகட்சித் தலைவர்களும் கூட்டத்தில் கலந்து கொண்டனர்.

இந்திரா கட்சியை சார்ந்த ஜெயராமரெட்டியார் உடல் நிலை சரியில்லாததால் கூட்டத்தில் கலந்துகொள்ள இயலவில்லை என்றும் கூட்டம் எடுக்கும்முடிவினை ஆதரிப்பதாகவும் தெரிவித்து கடிதம் எழுதியிருப்பதாக முதலமைச்சர் நிருபர்களிடம் கூறினார்.

கூட்டம் முடிவுற்ற பின் கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவுகளை முதலமைச்சர் கருணாநிதி நிருபர்களிடம் கூறினார்.

இக்கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவுகளின் விவரமாவது:

தமிழ் நாட்டில் எதிர்காலத்தைப் பெரிதும் பாதிக்கும் வகையில் தமிழக அரசின் ஒப்புதலை பெறாமலும் மத்திய அரசின் ஒப்புதலைப் பெறாமலும் 1892, 1924 ஆகிய ஆண்டுகளின் ஒப்பந்தங்களுக்கு விரோதமாக மைசூர் மாநில அரசு ஹேமாவதி, கபினி போன்ற திட்டங்களை தன்னிச்சையாக நிறைவேற்றுவதை உடனடியாக மத்திய அரசு தடுத்து நிறுத்தாமல் தாமதப்போக்கில் இருப்பதை இக்கூட்டம் வன்மையாகக் கண்டிக்கிறது.

தமிழக அரசு கோரியுள்ளவாறு உடனடியாக காவிரி நதி நீர் பங்கீட்டுப் பிரச்னையை நடுவர் தீர்ப்புக்கு விடவேண்டும்என்று மத்திய அரசை வலியுறுத்துகிறது. அதற்கிடையே மைசூரில் அணைகள் கட்டப்படுவதை தடுத்து நிறுத்த மத்திய அரசு உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டுமென வற்புறுத்துகிறது.

தமிழ் நாட்டின் வருங்காலம் பாதிக்கப்படுவதை உணர்த்தும் வகையிலும் மத்திய அரசு காட்டும் மந்தமான போக்கை உணர்த்தும் வகையிலும் தமிழ்நாட்டிலுள் அனைத்துக்கட்சிகளும் இணைந்து ஜூன் 27-ம் தேதி ஞாயிறன்று தமிழகமெங்கும் கண்டனநாள் கூட்டங்கள் நடத்துவதென இக் கூட்டம் தீர்மானிக்கிறது.

தமிழக ஆட்சிமன்ற உறுப்பினர்கள் அனைவரும் கட்சி சார்பற்ற முறையில் ஜூன் 27ல் டில்லியில் தலைமை அமைச்சர் இந்திரா வீட்டிற்கு அமைதியான முறையில் ஊர்வலமாகச் சென்று தமிழகத்தின் இந்த அவசர முக்கியத்துவம் வாய்ந்த பிரச்னை பற்றி முறையீடு ஒன்றை தலைமை அமைச்சரிடம் தந்து ஆவன செய்திட தலைமை அமைச்சரை வற்புறுத்த வேண்டுமென இக் கூட்டம் கேட்டுக் கொள்கிறது.

எவ்வகையிலும் தமிழக கர்நாடக மாநிலமக்களின் நல்லுறவும் நட்பும் பாதிக்

(7-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 35,664 மாணவர் வடபகுதியில் பொதுவிஞ்ஞானம் கற்கின்றனர்!

— நமது நிருபர் சி. பாலசிங்கம் —

குருநகர் வியாழன்

வடபகுதியில் 6-ம் வகுப்பு முதல் 8-ம் வகுப்புவரை பொது விஞ்ஞானம் கற்கும் மாணவர்களின் தொகை 35,664 என்று கணக்கிடப்பட்டுள்ளது. வடபகுதியில் பொதுவிஞ்ஞானம் கற்பிக்கும் 476 பாடசாலைகளில் எடுக்கப்பட்ட புள்ளிவிபரங்களிலிருந்து இது தெரிய வந்துள்ளது.

6-ம் வகுப்பில் 13,490 மாணவரும் 7-ம் வகுப்பில் 11,564 மாணவரும் 8-ம் வகுப்பில் 10,610 மாணவர்களும் கல்விகற்கின்றனர்.

இவற்றில் 6-ம், 7-ம் வகுப்புகளில் கல்வி கற்கும் மாணவரின் தொகை யாழ்ப்பாணப்பகுதியிலுள்ள பாடசாலைகளில் அதிகமாகவிருக்கிறது. இரண்டாம் இடத்தை உடுவில் வகிக்கிறது. 8-ம் வகுப்பில் பொதுவிஞ்ஞானம் கற்கும் மாணவர்களின் கூடிய தொகை யாழ்ப்பாணத்திலும் அடுத்ததாக சாவகச்சேரியிலும் இருக்கின்றது.

6-ம், 7-ம், 8-ம் வகுப்புகளில் மொத்தமாக விஞ்ஞானம் கற்கும் மாணவர்கள் யாழ்ப்பாணத்திலேயே இருக்கிறார்கள். இங்கு 4683 மாணவர்களும் இரண்டாவது இடத்தை வகிக்கும் உடுவில் பகுதி பாடசாலைகளில் 3,841 மாணவரும் சாவகச்சேரியில் 3503 மாணவரும் கல்விகற்கின்றனர்.

வடபகுதியில் விஞ்ஞானம் கற்பிக்கும் பாடசாலைகள் 476 உண்டு. இவற்றில் வவனியா மாவட்டத்திலேயே அதிகமான பாடசாலைகளில் 6-ம், 7-ம், 8-ம் வகுப்புகளுக்கு பொதுவிஞ்ஞானம் போதிக்கப்படுகிறது. வவனியாவில் 63 பாடசாலைகளிலும் இரண்டாவது இடத்தை வகிக்கும் வட்டுக்கோட்டையில் 46 பாடசாலைகளிலும் மூன்றாவது இடத்தை வகிக்கும் சாவகச்சேரியில் 45 பாடசாலைகளிலும் பொதுவிஞ்ஞானம் கற்பிக்கப்படுகிறது.

வடபகுதி கல்விப்பகுதியினரால் ஒழுங்குசெய்யப்பட்டு யாழ்ப்பாணம் வேம்படி மகளிர் கல்லூரியில் கடந்த சிலதினங்களாக இடம்பெற்ற விஞ்ஞான பொருட்காட்சியில் வைக்கப்பட்டிருந்த புள்ளிவிபரத்திலேயே இந்த விபரங்கள் தெரிவிக்கப்பட்டுள்ளன. 8-ம் வகுப்புக்கு மேற்பட்ட மாணவர்களுக்கான இந்தக் கண்காட்சியை சுமார் 150 பாடசாலைகளைச் சேர்ந்த பத்தாயிரத்துக்கும் அதிகமான மாணவர்கள் பார்வையிட்டனர்.

## 'சண்டிலிப்பாய்

## கிராம வளர்ச்சிக்கு உழைக்க முன்வருக'

சுழிபுரம், வியாழன்

"சண்டிலிப்பாய் கிராம முன்னேற்றத்துக்காகபெரியவர்களும், வாலிபர்களும் முன்னின்றுழைக்க வேண்டும். சண்டிலிப்பாய் வீதிகளில் ஒரு பஸ்தரிப்பு ஷெட்டுகள் கூட இல்லை. பிரயாணிகள் வெய்யிலிலும் மழையிலும் அவதிப்படுகின்றனர்" என்று சண்டிலிப்பாய் இந்து வாலிபர் சங்கத்தின் வருடாந்தப் பொதுக்கூட்டத்திற்குத் தலைமைவகித்த திரு. சு. கா. சபாநாதன் பேசுகையில் கூறினார்.

அவர் மேலும் பேசுகையில் இக்கிராமத்தில் இயங்கிவரும் ஒரேயொரு சனசமூக நிலையம்கூடச் சிறந்தமுறையில் செயற்பட போதிய கட்டிடவசதியில்லாதிருப்பதாகவும் அவர் கவலை தெரிவித்தார்.

## ஆனி உத்தரவிழாவில் நாடகம்

குருநகர், வியாழன்

காரைநகர் தோப்புக்காடு ஸ்ரீ சுப்பிரமணிய சுவாமி கோவில் ஆனி உத்தர விழா இம்மாதம் 30ம் திகதி நடைபெறுகின்றது. இத்திருவிழாவின்போது தோப்புக்காடு வள்ளுவன் மன்றத்தினரின் "ஓர் இரவு" என்னும் சமூக சீர்திருத்த நாடகமும் இடம்பெறவிருக்கின்றது. சங்கீத கதாப்பிரசங்கமும் நடைபெறும். அன்னதானம் வழங்குவதற்கான ஏற்பாடுகளை இக்கோவில் அன்னதான சபையினர் செய்துவருகின்றனர்.

## தொலைபேசி இல்லை; ஆனால் கட்டணம் கேட்கிறது இலாகா!

யாழ்ப்பாணம், வெள்ளி

கச்சாய்க் கிராமசபைக்கு டெலிபோன் வசதி பெறுவதற்கு 69-ம் ஆண்டு சுமார் 6000 ரூபா முற்பணமாக கட்டி இதுவரை டெலிபோன் இணைக்கப்படாத போதிலும் டெலிபோன் பாவித்த 'பில்' பணமாக 12 ரூபா கட்டும்படி தபால் தந்தி பகுதியிடமிருந்து கோரப்பட்டிருக்கிறது.

3 வருட காலமாக பல முறை எழுதியும், டெலிபோன் இணைக்கப்படாமல் 'பில்' வந்திருப்பது ஆச்சரியமாக இருக்கிறது என கச்சாய்க் கிராமசபைத் தலைவர் திரு. சிதம்பரப்பிள்ளை தெரிவித்தார்.

கிராமசபைக்கு டெலிபோன் தேவையென கோரியபோது முற்பணமாக 4120 ரூபா கட்டும்படி 25-7-69ல் கேட்கப்பட்டது. 8-8-69ல் முற்பணம் கட்டப்பட்டது. 21-8-69ல் டெலிபோன் இணைக்கநடவடிக்கை எடுக்கும்படி தந்தித்தொடர்பு பொறியியலாளரால் உத்தரவிடப்பட்டது. இந்த டெலிபோனுக்கான நம்பர் 03 என கிராமசபைக்கு அறிவிக்கப்பட்டது.

21-12-69ல் முற்பணம் போதாதென்றும் மேலும் 2868 ரூபா கட்டவேண்டும் என்று கிராமசபைக்கு அறிவிக்கப்பட்டது. 28-2-70ல் மிகுதிப்பணம் கட்டப்பட்டது. ஆனால் 70-ம் ஆண்டு நவம்பர் வரை டெலிபோன் இணைக்கப்படவில்லை.

19-9-70ல் தபால் தந்தி தொடர்பு அமைச்சர் திரு. செல்லையா குமாரசூரியருக்கு இந்த டெலிபோன் விஷயமாக மகஜர் ஒன்று கிராமசபையினால் அனுப்பப்பட்டது. அதன் பின்பும் எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

5-12-70 நவம்பர் மாதம் டெலிபோன் பாவித்த பில் பணமாக 12 ரூபா அனுப்பும்படி கிராமசபைக்கு அறிவிக்கப்பட்டது. இதன் பின்பும் பல தடவை முயற்சி எடுத்தும் இதுவரை டெலிபோன் வழங்கப்படவில்லை என்றும் கிராமசபைத் தலைவர் தெரிவித்தார்.

### மீன்பிடிச்சங்கம் அமைக்க முயற்சி

வல்வெட்டித்துறை, வியா

இரணைதீவு மேற்கில் ஹென்றி மீன்பிடி கூட்டுறவுச் சங்கம் என்ற பெயரில் பரந்தன் கூட்டுறவு இலாகாவினரின் உதவியுடன் திறக்கப்படவிருக்கிறது. இதற்கான முயற்சியை வணபிதா சங்கைக்குரிய திரு. தேவராஜன் மேற்கொண்டுள்ளார்.

### கம்பராமாயண கதாப்பிரசங்கம்

குருநகர் வியாழன்

யாழ்ப்பாணம் வண்ணை வீரமகாளி அம்பாள் ஆலயத்தில் நடைபெற்றுவரும் வருடாந்த உற்சவத்தை முன்னிட்டு மேற்படி ஆலயத்தில் தினமும் இரவு 8 மணி தொடக்கம் 9-30 மணி வரை பிரம்மஸ்ரீ சிவ. வை நித்தியானந்த சர்மா அவர்களால் 'கம்பராமாயண விரிவுரை' சங்கீத கதாப்பிரசங்கம் நடைபெற்று வருகின்றது.

### விவசாயப் பண்ணை அமைத்தல் போட்டி

குருநகர், வியாழன்

யாழ்ப்பாணப் பகுதி விவசாய போதனாசிரியர் பிரிவில் நடைபெற்ற ஒரு ஏக்கர் விவசாயப் பண்ணை அமைத்தல் போட்டியில் வண்ணார்பண்ணை இளைஞர் விவசாயக் கழகத்தைச் சேர்ந்த மாலேந்திரா முதலாவது இடத்தையும் திருநெல்வேலி இளம் விவசாயக் கழகத்தைச் சேர்ந்த க. ஜெயதரன் இரண்டாம் இடத்தையும் பெற்றுள்ளனர்

### விரைவில் பூர்த்தியாகும்

வேலணை, வியாழன்

புங்குடுதீவு, வேலணை பகுதிகளுக்கு மின்சாரத்திட்ட வேலையை பூர்த்திசெய்வதற்கான நடவடிக்கைகள் துரிதமாக மேற்கொளளப்பட்டுள்ளதாக இலங்கை மின்சாரசபை பிரதேச முகாமையாளர் தீவுப்பகுதி எம். பி. பண்டிதர் இரத்தினத்துக்கு கடிதமூலம் தெரிவித்துள்ளார்.

### நாயன்மார்கட்டில் திருமுறைமகாநாடு

அரியாலை, வியாழன்

யாழ்ப்பாணம் நாயன்மார்கட்டில் இம்மாதம் 29-ம், 30-ம் திகதிகளில் திருமுறை மாநாடு விரிந்த முறையில் நடைபெறுவதற்கு ஏற்பாடுகள் நடைபெற்றுவருகின்றன. இம்மகாநாடு ஸ்ரீராஜராஜேஸ்வரி அம்மன் ஆலய வீதியில் நடைபெறும்.

### நிர்வாகிகள்

உடும்பராய், வியா

உடும்பராய் கற்பகவிநாயகர் ஆலய வருடாந்தப் பொதுக்கூட்டம் திரு வே. நல்லையா தலைமையில் நேற்றுமுன்தினம் நடைபெற்றது. பின்வருவோர் புதுவருட உத்தியோகத்தர்களாக தெரிவுசெய்யப்பட்டனர்:

போஷகர்: திரு. ம. சபாநாயகம், தலைவர்: திரு சி. செல்லப்பா, உபதலைவர்: திரு. வ. கனகரத்தினம், காரியதரிசி: திரு. இ. இரத்தினவேலு, உபகாரியதரிசி: திரு. கு. நவரத்தினசாமி, தனாதிகாரி: திரு. த. சிவசுப்பிரமணியம், உபதனாதிகாரி: திரு. சு. தம்பாப்பிள்ளை. 10 பேர்கொண்ட நிர்வாகசபையும் தெரிவு செய்யப்பட்டது.

# வைத்தியத்துறையில் குறுகிய நோக்கு கூடாது

இந்தப் 10 வருட முடிவுக்குள் வைத்தியர்களின் பற்றாக்குறை ஏற்படும் என்பதற்கான சாத்தியக்கூறுகள் நாட்டில் காணப்படுகின்றன. நாலாவது திட்டத்தின் கீழ் நிறுவப்படத் தீர்மானிக்கப்பட்டிருக்கும் 10 புதிய வைத்தியசாலைகளும் பூரணமாக நிறுவப்படும் எனக் கூறிவிட முடியாது. மேலும் பல வைத்தியக்கல்லூரிகள் நிறுவப்பட்டால் வைத்தியர்களின் எண்ணிக்கை அதிகரித்துவிடும் எனச் சில மாநிலங்கள் பீதியடைந்துள்ளன. கேரளாவில் சில ஆண்டுகளுக்கு முன்னர் வைத்தியர்கள் வேலைவாய்ப்பின்றி இருப்பதாகக் கூறப்பட்டது. ஆனால் உண்மை என்னவெனில் இவர்களுக்கு அரசாங்கத்துறையில் வாய்ப்புக் குறைவாக இருந்தமையேயாகும். தமிழ்நாடு அரசாங்கமும் வைத்தியர்கள் அதிகரித்துவிடுவார்கள். அதனால் அவர்கள் மத்தியில் வேலையில்லாப் பிரச்சினை தலைதூக்குமென்ற எண்ணம் கொண்டு வைத்தியத்துறைக்கு அனுமதிக்கும் மாணவர்களின் தொகையைக் குறைக்க எண்ணியது. ஒவ்வொரு வைத்தியத்துறை மாணவனுக்கும் ரூபா 70000 செலவு செய்யும் அரசாங்கத்தினால் அவனுக்குவேலை ய்ப்பளிக்க இயலாதிருப்பது பெரும் நஷ்டத்தைக் கொடுக்கும் மத்திய சுகாதார அமைச்சர் குறிப்பிட்டது போன்று வைத்தியத் துறையினருக்கு அரசாங்க உத்தியோகம் மட்டுந்தான் உள்ளதென நினைத்துவிடக்கூடாது. நகரப்புறங்களிலும் நகரத்தை அடுத்த பகுதிகளிலும் வைத்தியர்களின் எண்ணிக்கை ஓரளவு திருப்தியளிக்கத்தக்க வகையில் உள்ளதெனினும் கிராமப்புறங்களில் வைத்தியர் பற்றாக்குறை நிலவுகின்றது. வருங்காலத்தில் பொருளாதார அபிவிருத்தி மக்களின் வாழ்க்கைத்தரத்தை உயர்த்தவேண்டுமானால் அரசாங்கத்தின் சுகாதாரத் திட்டங்கள், குடும்பநலத் திட்டம் ஆகியவற்றைத் தீவிரமாகச் செயல்படுத்தவேண்டும். இவற்றைச் செயல்படுத்த வைத்தியர்கள் தொகையை அதிகரிக்கவேண்டும். தற்போது குடும்பக்கட்டுப்பாடு பற்றியும், குடும்ப நலன் பற்றியும் கிராமங்களில் பிரசாரம் செய்யப்பட்டுள்ள போதும் இப்பிரசாரத்துக்குத் தக்க அளவு இந்தக் கோட்பாடுகளைச் செயல்படுத்தவும் கிராம மக்களுக்கு ஆலோசனை கூறி உதவி செய்யவும் தகைமைவாய்ந்த வைத்தியர்கள் போதியளவு இல்லையென்றே கூறலாம். கிராமங்களில் புதிதாக ஆரம்பிக்கப்பட்ட சுகாதார நிறுவனங்களில் வைத்தியர்கள் இல்லை. வைத்தியத்துறையில் ஒழுங்கற்ற திட்டமிடுதலால் ஜனத்தொகைப் பெருக்கத்தைக் கட்டுப்படுத்தும் வேலையும் காலதாமதமாகும்.

இவற்றை நோக்கும்பட்சத்து வைத்தியர்கள் தொகை அதிகரிக்கப்படவேண்டும் என்பது வெளிப்படையாகிறது. இதை நிவர்த்திசெய்ய முயலும்போது எச்சரிக்கையாக இருக்கவேண்டும். வைத்தியக் கல்வியின் தரத்தில் விட்டுக்கொடுக்கும் தன்மை இருக்கக்கூடாது. அதாவது அதன் தரத்தைக் குறைக்கக்கூடாது. ஏற்கனவே இத்துறையில் இருந்த கட்டுப்பாடுகள் ஓரளவு தளர்த்தப்பட்டுள்ளன. பீகாரிலுள்ள சில வைத்தியப் பட்டதாரிகளுக்கு அடிப்படை மனித உடற்கூறுபாடு கூடத் தெரியாதிருந்தது எனக் கூறப்பட்டது. இங்கு குறிப்பிடத்தக்கது. அதாவது வைத்தியக் கல்வியின் தரத்தை எந்த விதத்திலும் குறைக்கக்கூடாது. குறைத்தா[...] மேற்படி நிலையேற்படலா[...] எனவே வைத்தியத்து[...]க்கு மாணவர்களைத் தெ[...] செய்யும்பொழுது தகுதி[...] அடிப்படையாகக் கொண்[...] அதற்கே கூடிய முக்கியத்[...]வம்கொடுத்து மாணவர்க[...] தெரிவுசெய்யவேண்டு[...] வைத்தியத்துறைக்கு மா[...]வர்களை அனுமதித்தல், பரீ[...]சைகளை நடத்துதல் ஆ[...] வற்றில் கையாளும் ந[...] முறைகளை தளர்த்தாது க[...]மையாக்கவேண்டும். [...] பொழுதுதான்தரத்தை உ[...]ர்த்தலாம்மாணவர்களை அ[...] மதிப்பதில் எவ்வளவு [...]ம் செலுத்தப்படுகிறதோ அந்த அளவுக்கு அவர்களு[...]குப் போதிக்கும் ஆசிரி[...]களைத் தெரிவுசெய்வதிலு[...] கவனம் செலுத்துவது அ[...]யாவசியமாகும். தகுதிவா[...]ந்த விரிவுரையாளர்களு[...] செய்முறைப் படிப்புக[...] நல்ல வசதியுள்ள வைத்தி[...]சாலைகளும் வைத்திய[...]க்கு இன்றியமையாத[...]வாகும். புதிய வைத்திய[...] கல்லூரிகள் நிறுவப்படு[...] போது இவற்றுக்கு முக்[...]யத்துவம் அளிக்கவேண்டு[...] இந்த வசதிகளை அளிப்[...]பதற்கு வசதி குறைவா[...] இருப்பதால் புதிய கல்லூ[...]களை நிறுவுவதில் தாமத[...] ஏற்படுகிறதெனின் அ[...] நீதியான சமாதானமா[...] ஏற்றுக்கொள்ளலாம். ஆன[...] வைத்தியர்கள் வேலையில்லாப் பிரச்சினை ஏற்பட்டுவிடுமேயென்ற பீ[...] காரணமாகக் கல்லூரிகளை[...]

### "சமூகத்தொண்டு என்றால்..."

அரியாலை, வியா

"கல்வியின்பயன் கற்றபடி ஒழுகுதலாகும். இடைவிடாது சிந்தித்தல், தெளிதல் என்பன அமையும். இந்தத் தெளிவுதான் சமய வாழ்க்கைக்கும் சமூகசேவைக்கும் எம்மை இட்டுச்செல்கின்றது. சமுதாயத்தொண்டு என்பது ஆண்டவன் வழிபாட்டை ஒட்டி நிற்பதுதான். தெய்வநம்பிக்கை இல்லாத உள்ளத்தில் மனச்சாட்சி வேலைசெய்யாது. நீதி உயிரற்றுப்போகும்".

நல்லூர் திருஞானசம்பந்தர் ஆதீனத்தில் ஸ்ரீலஸ்ரீ சுவாமிநாததம்பிரான் சுவாமிகளின் மேற்பார்வையில் நடைபெற்றுவரும் சிவஞானபோத விரிவுரையின் ஐம்பதாவதுதின விரிவுரை இளைப்பாறிய கல்வி அதிபதி திரு. எஸ். யூ. சோமசேகரம் தலைமையில் நேற்றுமுன்தினம் நடைபெற்றபொழுது கந்தபுராணப் பிரசாரகர் வித்துவான் க. கணபதிப்பிள்ளை உரையாற்றுகையில் மேற்கண்டவாறு கூறினார்.

கல்வியினால் ஆனபயன், இறைவன் நற்றாள் தொழுவதும் அதன் இசைபட வாழ்தலும் ஆகும் என்று அவர் கூறினார்.



பீ எச் சி

நெற் பூச்சி கட்டுப்பாட்டிற்கு பீ எச் சி 10% தூள். சிறந்தது. பீ எச் சி 6% துணுக்குகளும், பீ எச் சி 20% ம், தண்டு அரிப்புக்கு உகந்தது.




களைக்கொல்லி

'M-50'

'எம்சிபிஏ' யின் ஓர் விசேஷ வகுப்பாடான இக்'களைக்கொல்லி,' 3-5 வாரம்வரை வளர்ந்திருக்கும் நெற்தானியத்தில் தெழித்து அகன்ற இலைக்களைகளையும், கோரைப் புல்லையும் தெரிந்து அழிக்கவல்லது.




ஓர் ப[...]
இருமி[...]
பா[...]

லங்கெம் இலங்[...]

செலிங்கோ ஹவுஸ் த[...]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## செபமாலே யாருடையது?

திரு. ஜே. செபஸ்தியாம்பிள்ளையால் நீகல் தியேட்டருக்கருகாமையில் கண்டு எடுக்கப்பட்ட செபமாலே ஒன்று ஈழநாடு காரியாலயத்தில் வைக்கப்பட்டுள்ளது. உரியவர்கள் காரியாலய நேரத்தில் வந்து அத்தாட்சி காட்டிப் பெற்றுக்கொள்ளலாம்.

—

## தியான வகுப்பு

அரியாலே, வியாழன்

நல்லூர் சட்டநாதர் கோவிலுக்கு அருகில் உள்ள திவ்ய ஜீவனசங்க மண்டபத்தில் பிரதி போயா தினமும் தியான வகுப்புக்கள் நடைபெறுகின்றன. ஏராளமான அடியார்கள் இவ்வகுப்புக்களில் கலந்துகொள்கின்றனர்.

......

## சைக்கிள் களவு அதிகரிப்பு

உடுப்பிட்டி, வியா

நெல்லியடி மத்திய சந்தைக்கு முன்பால் நிறுத்தப்படும் சைக்கிள் வண்டிகள் அடிக்கடி களவாடப்படுவதாக புகார் கூறப்படுகிறது.

துன்னாலையைச் சேர்ந்த சிறுவனொருவனின் சைக்கிள் ஒன்று அண்மையில் களவாடப்பட்டுள்ளது.

---

நிறுவுவதில் தாமதம் காட்டப்பெற்றால் அது அரசின் குறுகிய நோக்கையே காட்டும். நாட்டுக்குக் குறிப்பாகக் கிராமப்புறங்களில் கடமையாற்ற வைத்தியர்கள் பெருமளவில் தேவைப்படுகின்றனர். ஆனால் இவர்கள் தொழிலாற்ற ஊதியம் வழங்குமென நாடு இவர்களுக்கு உறுதியளிக்கவேண்டும். ('இந்து' பத்திரிகை)

பாகிஸ்தானுக்கு

# ஆயுதம் கொண்டு செல்லும் கப்பல்களை தடுக்க கோரிக்கை

புதுடில்லி, ஜூன். 24

பாகிஸ்தானுக்கு ஆயுதம் கொண்டு செல்லும் இரு கப்பல்களையும் அங்கு ஆயுதம் இறக்கவேண்டாம் என்று உத்தரவிடும்படி அமெரிக்க அரசாங்கத்தை இந்திய அரசாங்கம் வற்புறுத்தியுள்ளது.

பாகிஸ்தானுக்கு ராணுவ ஆயுதங்களை வழங்குவதற்காக இரண்டு கப்பல்கள் அமெரிக்காவிலிருந்து கராச்சி நோக்கி போய்க்கொண்டிருப்பதாக முன்பு செய்தி வெளிவந்திருந்தது. இது பற்றி இந்திய லோகசபையில் அங்கத்தவர்கள் பெரும் எதிர்ப்புத் தெரிவித்தார்கள். அந்தக் கப்பல்களை இந்தியா வழிமறிக்கவேண்டும் என்றும் ஆயுதங்களை பாகிஸ்தானில் இறக்குமதி செய்யக்கூடாது என்றும் பலர் வற்புறுத்தினர்.

விவாதங்களுக்கு பதிலளித்த வெளிஉறவு அமைச்சர் திரு. சுவரண்சிங் இந்தக் கப்பல்கள் பாகிஸ்தானுக்கு ஆயுதங்களை வழங்காதபடி தடுக்கும்படியும், மேற்கொண்டு ஆயுதங்களை அந்த நாட்டுக்கு வழங்க வேண்டாம் என்றும் அமெரிக்க அரசாங்கத்தைக் கேட்டிருப்பதாக கூறினார்.

இந்தக் கோரிக்கை மிக அவசரமாக ஆலோசனைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டதாக அமெரிக்கா தெரிவித்திருப்பதாகவும் அதன் முடிவுகளை இந்தியா எதிர்பார்ப்பதாகவும் அவர் மேலும் சொன்னார்.

இது ஒரு சாதாரணவிஷயமல்ல, இந்திய துணைக்கண்டத்துக்கும் இது பெரும் அபாயம் விளைவிக்கக்கூடியதாகும் என்றும் சொன்னார்.

## 8 முழத்தண்ணீர் 20 முழத்தில் இல்லே

உடுப்பிட்டி, வியாழன்

கோவிலுக்கெனச் சிரமதானம்மூலம் கிணறுவெட்டி நீர்கண்டதும் தண்ணீர்ப் பொங்கல் செய்த மறுநாள் கிணற்றிலிருந்து நீர் அப்புரவாக வற்றிய சம்பவமொன்று ஆத்தியடி மூகலிப்பேத்தி கோவிலில் நடைபெற்றுள்ளது.

இக்கிணறு சிரமதானம் மூலம் வெட்டப்பட்டது. 8 முழம் தோண்டியதும் கிணற்றிலிருந்து நீர் வெளிவரத் தொடங்கியது. இதனைக்கண்டு மகிழ்ந்த சிரமதானத் தொண்டர்கள் தண்ணீர்ப் பொங்கல் பொங்கிக் கொண்டாடினர். ஆனால் மறுதினம் கிணறு நீரின்றி வெறுமையாகக் காணப்பட்டது. இதனைத் தொடர்ந்து மேலும் கிணறைத் தோண்டினர். சுமார் 20 முழத்தில் சிறிதளவு நீர் கிணற்றில் ஊறத் தொடங்கியது என்று கூறப்பட்டது.

......

## விநாயகர் பிரதிஷ்டை

உடுப்பிட்டி, வியாழன்

பருத்தித்துறை அத்தியடி முதலிப்பேத்தி கோவிலில் புதிய விநாயகர் விக்கிரகமொன்று பிரதிஷ்டை செய்து வைக்கப்பட்டுள்ளது. இதனை முன்னிட்டுப் பத்து நாட்கள் விசேட அபிஷேகமும் பூஜைகளும் நடைபெற்றன.

# ஜெயராஜன் எழுதுவது

கொழும்பிலே ஒருஸ்தாபனத்தின் நிர்வாக சபைக்கு இரு புதிய மெம்பர்களைச் சேர்க்க வேண்டியிருந்தது. மூன்று பெயர்கள் பிரேரிக்கப்பட்டன. இதில் இருவரைத் தெரிவுசெய்வதென்றால் சட்டப்படி வாக்கெடுக்கவேண்டும். வாக்கெடுத்தால் வேற்றுமையும் பிளவுகளும் மனஸ்தாபங்களும் கிளம்பக்கூடும் இதையுணர்ந்து. திருவுளச்சீட்டுப் போட்டு இருவரைத்தெரிவு செய்யலாம் என்றும். ஸ்ரீராமன் தன் பணிக்குத் தேவையான இருவரைத் தெரிவு செய்துகொள்ளட்டும் என்றும் ஒரு மெம்பர் யோசனை கூறினார். அதுஏற்றுக்கொள்ளப்பட்டு திருவுளச்சீட்டுப்போட்டு, அவ்விதமே இருவரை ஸ்ரீராமசன சபை நிர்வாக சபையினர் தெரிவுசெய்ததைக் கண்டேன். மிக மகிழ்ச்சியாக இருந்தது.

கடவுள்மீது பொறுப்பைப்போட்டுவிட்டால் அவரது கட்டளையையே நிறைவேற்றுகிறோம் என்ற மன அமைதியும் திருப்தியும் ஏற்படுகிறது. 'எல்லாப்பொறுப்புகளையும் என்மீதே போட்டுவிடுங்கள். உங்களுடைய க்ஷேமலாபங்களையெல்லாம் நான் பார்த்துக் கொள்ளுகிறேன்' என்று கீதையிலே பகவான் உறுதி கூறுகின்றார். பார்லிமெண்ட் முதலிய அரசியல் ஸ்தாபனத் தேர்தல்களிலும் இவ்விதமுறையையே (தக்க நிபந்தனைகளுடன்) பின்பற்றுவதாயின் நாட்டில் ஒற்றுமையும் சுபீட்சமும் வளர்ந்து மக்களுக்கும் அதிக நன்மை ஏற்படக்கூடும் ஆனால் இன்றுள்ள நிலையில் இதைப்பற்றி நினைக்கவும் முடியுமா? ஆனால் ஸ்ரீராமகான சபையார் காட்டிய இந்த முன்மாதிரியை பல சமய சமூக ஸ்தாபனங்களாவது பின்பற்றலாம் இதனால் சமய சமூக ஸ்தாபனங்களில் தேர்தல் போட்டிகள் இன்றி ஒற்றுமை பலப்பட்டு வேலைகளும் அதிக சிறப்பாக நடைபெற முடியும்.

0 0 0

தேர்தல் என்றதும் தமிழ்நாட்டிலே இராசாங்கள் முதல் மதுரை, திருச்சி, சென்னை முதலிய பெரிய பட்டினங்களில் கண்ட காட்சிதான் நினைப்புவருகின்றன. அங்கு தேர்தல் முடிந்து பல மாதங்களாகியும் அவர்களெல்லாம் தேர்தல் போட்டாபோட்டிகளை இன்னும் மறக்கவிடாமல்செய்து வருகின்றன, சுவர்களில் எழுதியுள்ள பல கட்சிவேட்பாளர்களின் பிரசாரங்கள் சிலசமயம் பரிகாசத்துக்கும் இடமாகின்றன, தேர்தலில் கட்டுப்பணத்தையும் இழந்த வேட்பாளரின் படத்தையும் பெயரையும் போட்டு "இவருக்கே எங்கள் வாக்கு" என்று சுவரொட்டிகள் அறிவிக்கின்றன. தி. மு. க. காங்கிரஸ், சுதந்திரா, கம்யூனிஸ்ட் முதலிய பல கட்சிகளுக்கிடையிலும் எவ்வளவு தீவிரமாக தேர்தல் போட்டா போட்டிகள் இருந்திருக்கவேண்டுமென்பதை அங்கு எல்லாச் சுவர்களும்

(8-ம் பக்கம் பார்க்க)




# உங்கள் பரமவிரோதிகளே அறவே ஒழித்திடுக!

**சுமித்தியன்**
ஓர் பாதுகாப்பான, நிச்சய இருமிநாசினி. விசேஷமாக குமிழ் ஈ கட்டுப்பாட்டிற்கு உகந்தது.

**'என்ட்ரெக்ஸ்' 20**
இன்று அதிகமாகப் பாவிக்கப்படும், அதி சிக்கனமான, 'சகல-நிவாரண' கிருமிநாசினி எல்லா நெற்களை அழிப்பிற்கும் உகந்தது.

**களேக்கொல்லி 'D'**
3-5 வாரம் வரையிலான நெற் தானியத்தில் தெழித்து அகன்ற இலேக்களேகளேயும், கோரைப் புல்லேயும் தெரிந்தகற்றும் 2, 4-D விகித 'எஸ்தர்' வகுப்பாடாகும்.

**'அசெர்ட்றின்' 60**
ஏனைய கிருமிநாசினிகளால் அழிக்க முடியாத நெற் பீடைகளே முற்றழிக்க வல்ல, ஓர் வன்மைமிகு புதிய படிமுறை சகல-நிவாரண கிருமிநாசினியாகும்.

**களேக்கொல்லி 'P-20'**
ஈரலிப்பான நிலத்தில் பயிரிடும் நெல்வகையின் வேளாண்மைக்கு முன் தெளிக்க உகந்தது. இவ்வேளே சகல தாவரங்களதும் முற்றழிப்பிற்கும், முதல் மழையுடன் தெழிக்கச் சிறந்தது. வித்துக்கள் விதைத்தலின் பின்முளேத்தலேத்தடுக்க இம்முறை உகந்தது.

**'ஸ்டாம்' எப்-34**
7-18 நாள் வரையிலான நெற்தானியத்தைத் தாக்கும் அகன்ற இலேக்களே, கோரை, புல் அனேத்தையும் தெரிந்தழிக்க உகந்த புதிய சீராக்கிய 36% வகுப்பாடான 3, 4 டீபிஏ சேர்வையாகும்.




இலங்கை லிமிட்டெட்
கா ஹவுஸ் த. பெ. 919 கொழும்பு. டெலிபோன்: 28333

LANKEM

இரசாயன சேவைக்கு மறுசொல் லங்கெம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"பொதுமக்கள் ஊழியன்

## மனிதாபிமானத்துடன் பிரச்னையை அணுகவேண்டும்"

யாழ்ப்பாணம், வெள்ளி

"ஓர் அரச ஊழியன் எந்தப்பிரச்னையையும் மனிதாபிமானத்துடன் அணுகவேண்டும். சட்டதிட்டங்களை அழுங்குப் பிடியாகப் பிடித்துக் கொண்டிருப்பவர்களால் பொதுமக்கள் பிரச்னைகளைத் தீர்க்கமுடியாது. சட்டதிட்டங்களின் நல்நோக்குக்கு ஊறு செய்யாதவாறு மனிதாபிமான அடிப்படையில் பிரச்னைகளை நோக்கும் ஒரு ஊழியன் தான் பொதுமக்கள் ஊழியனாக முடியும். இந்த வகையிலே திரு. நல்லையா ஒரு முன் மாதிரியான ஊழியர் என்பதை எவரும் மறுக்க முடியாது. தாழவுரைக்கும் தகைசான்ற பண்பும், இன் சொல்லும், அன்புச் சுபாவமும் அவருடன் வேலைசெய்த அனைவரையும் ஆட்கொண்டு விட்டன. இத்தகைய ஒருவரை இழப்பதில் மிக வேதனையடைகிறேன்."

இவ்வாறு வடமாநிலக் கல்வி அதிபதி திரு. டபிள்யு. ஜி. மஹாதந்தில, வடமாநிலக் கல்வித்திணைக்களக் கணக்காளராகஇருந்து நீர்ப்பாசனத் திணைக்களத் தலைமைக்கணக்காளராகப் பதவி உயர்வு பெற்றுச் செல்லும் திரு. மு. நல்லையாவுக்கு வடமாநிலக் கல்வித்திணைக்கள ஊழியர்கள் அளித்த நன்றிவிருந்தின்போது பேசுகையில் குறிப்பிட்டார்.

பிரதம கல்வி அதிகாரி திருமதி ஆர். எஸ். பாமர், நிர்வாக அதிகாரி திரு க தேவசிகாமணி, மற்றும் திருவாளர்கள் வி. சண்முகநாதன், ஆர். எஸ். சிவரத்தினம், வி முத்துதம்பி, எஸ். கெந்தா, எஸ். நவரத்தினம் ஆ. தேவராசா ஆகியோரும் பாராட்டுரை வழங்கினர்.

......

வர்த்தக அமைச்சுக்கு

## $6\frac{1}{2}$ லட்சம் ரூபா நஷ்டம்

கோட்டை, வியா

சமீப காலத்தில் நாட்டில் பயங்கரவாத இயக்கத்தினால் ஏற்பட்ட அழிவினால் உள்நாட்டு வெளிநாட்டு வர்த்தக அமைச்சைச் சேர்ந்த இலாகாவின் கூட்டுறவு அபிவிருத்தி நிறுவனங்கள் சந்தைப்படுத்தும் இலாகா பொருள் சொல்லளவு ஸ்தாபனம் கூட்டுறவு மொத்த விற்பனை ஸ்தாபனம் ஆகியவற்றிற்கு ஆறரைலட்சம் ரூபாவுக்கு மேல் நஷ்டமேற்பட்டுள்ளதாம்.

இதில் ஆகக்கூடிய நஷ்டம் கூட்டுறவு இயக்கத்துக்கும் கூட்டுறவு அபிவிருத்தி இலாகாவுக்கும் எனக் கூறப்படுகிறது.

......

## முதல் பிரிவில் 50 பேர்

அம்பன், வியா

யாழ்ப்பாண மாவட்டத்திலிருந்து விசுவமடு மேட்டுநில நீர்ப்பாசனக் காணிக்கு விண்ணப்பித்த படித்த வாலிபர்களில் முதலாவது பிரிவில் 50 பேர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். இவர்களுக்கு இம்மாதம் 28ந் திகதி காணிகள் வழங்கப்படவிருக்கிறது காணிகிடைக்கப்பெற்ற 50 பேரையும் 28ந் திகதி காலை 7 மணிக்கு யாழ்ப்பாண அரசாங்கச் செயலகத்திற்குச் சமூகம் அளிக்கும்படியும், சமூகம் அளிக்கமுடியாதோரை இம்மாதம் 23ந் திகதிக்கு முன்னர் யாழ்ப்பாண மாவட்டக் காணி அதிகாரிக்கு அறிவிக்கும்படியும் அறிவிக்கப்பட்டுள்ளது. விண்ணப்பித்தோரில் இரண்டாவது பகுதியில் தெரிவு செய்யப்பட்டோருக்கு அடுத்ததாகவும், மூன்றாவது பகுதியில் தெரிவுசெய்யப்பட்டோருக்கு 1972ம் ஆண்டு வரையும் காணி வழங்கப்படுமெனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

......

## குற்றங்களை நீக்கி கிராமத்தை முன்னேற்றுங்கள்

குருநகர், வியா

மண்டைதீவு கிராமத்தில் நடந்து வரும் சிறு குழப்பங்களையும் அரசாங்க ஊழியர்களுக்கு இடையூறாகவும் சிலர் நடத்தி வருகின்ற முறை கேடுகளையும் நீக்குவதற்கான முயற்சிகளை மண்டைதீவுகிராமசேவையாளர் எஸ்.கனகலிங்கம் எடுத்து வருகின்றார்.

குற்றங்களை நீக்கி கிராமத்தை முன்னேற்ற ஒத்துழைப்பு தருமாறு அவர் பொதுஜனங்களுக்குவேண்டுகோள் விடுத்துள்ளார்.

......

## 'புதுமை செய்த புதுமைக் கவிஞர்'

யாழ்ப்பாணம், வெள்ளி

"'மகாகவி'யின் பிரிவு ஈழத்துத் தமிழ் இலக்கிய உலகுக்கு ஒரு பேரிடி ஆகும். துயரில் அந்த இலக்கிய நண்பர்களையும் இளம் கவிஞர்களையும் தனிக்கவிட்டுப் பிரிந்துவிட்டார். அவர் வளர்த்து விட்ட கவிஞர்கள் மிகப் பல. அவர் கலந்துகொண்ட கவியரங்குகள் மிகப்பல. தமிழ்க் கவிதைக்குப் புது மெருகு ஊட்டிப் புதுப்புதுத்துறையில் புதுமை செய்த புதுமைக் கவிஞர் அவர். தமிழ்க் கவிதைத்துறை அவரது ஆக்கத்தால் புதுவளம் பெற்றது. அவர் பிரிவு ஈடு செய்ய முடியாத பேரிழப்பாகும்." இவ்வாறு உத்தியோக மொழித் திணைக்கள உதவி ஆணையாளராயிருந்து கடந்த வாரம் காலமான ஈழத்தின் பிரபல கவிஞர் 'மகாகவி'யின் மறைவையொட்டி மேலைப்புலோலி கதிரைவேற்பிள்ளை கலாமன்றச் செயலாளர் திரு. ஆ. தேவராசன் தமது செய்தியில் தெரிவித்துள்ளார்.

......

## குடிநீர்ப் பிரச்னை மகாநாடு

குருநகர், வியா

தீவுப்பகுதியின் குடிநீர் பிரச்னை சம்பந்தமாக மகாநாடொன்றை கூட்டுவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன இம்மாதம் 29-ம் திகதி தீவுப்பகுதி காரியாதிகாரி அலுவலகத்தில் நடைபெறவிருக்கும் இந்த மகாநாட்டில் குடிநீரால் கஷ்டமடைந்துவரும் காரைநகர், தெற்கு, புங்குடுதீவு, எழுவைதீவு, ஊர்காவற்றுறை ஆகிய இடங்களின் கிராமசபைத் தலைவர்கள் கலந்து கொள்கின்றனர்.

......

## நீண்டகால தேவை பூர்த்தியாகும்

கோட்டை வியா

இலங்கைப் புகையிரதப் பகுதி புகையிரத என்ஜின்களையும், புகையிரதப் பெட்டிகளையும்கொள்வனவு செய்ய நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.

புகையிரதப் பகுதியின் நீண்டகால தேவை இக்கொள்வனவினால் பூர்த்தியாகும் எனப் புகையிரதப் பகுதியைச்சேர்ந்த பிரமுகர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

கடந்த சில காலங்களாகப் பிரயாணிகள் அனுபவித்துவந்த கஷ்டம் இதனால் தீரும் என மேற்படி பிரமுகர் குறிப்பிட்டுள்ளார்.

## உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டி

புத்தூர், வியா

புத்தூர் கலையகம் ச. ச. கலையம் வினஸ் விளையாட்டுக் கழகத்தினால் நடாத்தப்பட்டுவரும் கவிஞர் மு, செல்லையா ஞாபகார்த்தக் கேடயத்துக்கான 8-வது உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியின் இதுவரையிலான முடிவுகள் பின்வருமாறு:

'ஏ' பிரிவுச் சாம்பியனாகத் தெல்லிப்பளை திருமகள் விளையாட்டுக் கழகமும் 'பி' பிரிவுச் சாம்பியனாக ஆவரங்கால் யாழ்டன் விளையாட்டுக் கழகமும், 'ஸி' பிரிவுச் சாம்பியனாக ஆவரங்கால் சர்வோதயா விளையாட்டுக் கழகமும் தெரிவுசெய்யப்பட்டுள்ளன. இப்பிரிவுகளுக்கிடையேயான அரைஇறுதிப் போட்டிகள் இவ்வாரத்தில் நடைபெறவிருக்கின்றன.

......

## நெல்லியடிப் பட்டினசபை வெற்றி

பருத்தித்துறை, வியா.

நெல்லியடிப் பட்டினசபைக் கோஷ்டிக்கும் கரவெட்டி விளையாட்டுக் கோஷ்டிக்குமிடையில் நடைபெற்ற சிநேகபூர்வமான கரபந்தாட்டப்போட்டியில் பட்டின சபைக் கோஷ்டி 2-0 ஆட்டங்களாகல்வெற்றியீட்டியது. குலவீரசிங்கம் பொன்ராசா ஆகியோரின் ஆட்டம் பாராட்டப்பட்டது திரு. பி பாலச்சந்திரன் மத்தியஸ்தம்வகித்தார்.

......

## தமிழ்டாக்டரின் தொய்வுநோய் ஆராய்ச்சி அறிக்கை

கோட்டை, வியா.

நெடுந்தீவைச் சேர்ந்த ஆயுள்வேத டாக்டர் க.மருதையினர் தொய்வுநோய் சம்பந்தமாக தாம் நடாத்திய ஆராய்ச்சி அறிக்கையை இன்று மாலை ஆயுள்வேத ஆராய்ச்சி நிலைய அதிபரிடம் சமர்ப்பித்துள்ளதாக அரசாங்க தகவல் பகுதி அறிவித்தது.

ஆயுள்வேத ஆராய்ச்சி நிலைய அதிபரின் வேண்டுகோளுக்கிணங்க இந்த ஆராய்ச்சியை டாக்டர் மருதையினர் நடாத்தினார்.

பரீட்சார்த்தமாக 16 நோயாளிகள் ஆராய்ச்சிக்கு எடுக்கப்பட்டு, ஆங்கில மருந்தொன்றும், ஆயுள்வேத மருந்தொன்றும் ஒருமாதகாலத்துக்கு வழங்கப்பட்டு தயாரிக்கப்பட்ட அறிக்கையையே இவர் இன்று சமர்ப்பித்தார்.

......

## ஜுலை 1.ம் திகதி நியமனம்

கோட்டை, வியா.

ஜுலை முதலாம் திகதியிலிருந்து அரசாங்க பாடசாலைகளில் 2000 முதலாந்தர தலைமையாசிரியர்கள் நியமிக்கப்படவிருக்கிறார்கள். இந்நியமனங்களுக்கான சகல நடவடிக்கைகளையும் கல்வி அமைச்சு எடுத்துள்ளது.

2-ம் தர தலைமையாசிரியர்களை நியமிப்பதற்கான நேர்முகப் பரீட்சையும் விரைவில்கல்வியமைச்சினால் மேற்கொள்ளப்பட இருப்பதாகத் தெரிகிறது.

——

## குருபூசை

ஊர்காவற்றுறை. வியாழன்

புங்குடுதீவு ஸ்ரீ கணேச வித்தியாசாலையில் திருஞான சம்பந்தர் குருபூசை கொண்டாடப்பட்டது. தலைமை ஆசிரியர் திரு. நா. கார்த்திகேசு தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில் ஆசிரியர் திரு. க. [illegible] குருபூசை [illegible] நிகழ்த்தினர்.

# ஆயுர்வேதபரீட்சை முடிவுகள்

யாழ்ப்பாணம், வியாழன்

வட இலங்கை சுதேசவைத்திய சபையார் யாழ்ப்பாணம் இலங்கா ஆயுள்வேதக் கல்லூரியில் சென்ற சித்திரைமாதம் நடத்திய வருடாந்தப் பரீட்சையில் கீழ்க்காணும் மாணவர்கள் சித்தியடைந்துள்ளனர்.

மூன்றும் வருடம்

1-ம் பிரிவு:

என். பிலோமினா, ஆர். மங்களாம்பிகை, ஏ. மேரி கிரேஸ்

2-ம் பிரிவு:

ஏ. அமிர்தநாதன், ரி. சித்திராதேவி, கே. இந்திமதி எஸ். விஜயநாயகி ஆர் பாக்கியநாதன், கே. வரதராசன், ஜி தில்லைநாயகம், ரி அருள்நந்தி

இரண்டாம் வருடம்

1-ம் பிரிவு

எம் சரோஜினிதேவி, எஸ். நிமலாவதி, கே உமாதேவி,

2-ம் பிரிவு

ஆர் தேவநாயகி, எஸ் இந்திராணி, எஸ் அமிர்தபூபதி, வி சண்முகராசா

முதலாம் வருடம்

முதல் பிரிவு:

ஸீ சாந்தகுமாரி

2-ம் பிரிவு

பி புஷ்பராணி, என் கதிரவேற்காந்தி, கே கமலாதேவி. எஸ் இராசமலர். என் சுசிலா கே நவரத்தினம் பி பிரான்சிஸ் வி, வீரசிங்கம்

——

ஆவரங்கால்

## சர்வோதயா வெற்றி

யாழ்ப்பாணம், வெள்ளி

புத்தூர் வினஸ் விளையாட்டுக் கழகத்தின் ஆதரவில் நடைபெற்றுவரும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் ஆவரங்கால் சர்வோதயா விளையாட்டுக் கழகம் தெல்லிப்பளை திருமகள் விளையாட்டுக் கழகத்தை 2—1 கோல்களால் வெற்றி பெற்றது. (தே.நி)

......

உதைபந்தாட்டம்

## அரியாலை வெற்றி

யாழ்ப்பாணம், வெள்ளி

யாழ். உதைபந்தாட்டச் சங்கத்தின் ஆதரவில் யாழ். மாவட்ட கழகங்களிடையே நடைபெற்று வரும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் அரியாலை ஐக்கிய விளையாட்டுக் கழகம், குருநகர் யுத்தவுன்ஸில் விளையாட்டுக்கழகத்தை வெற்றி பெற்றது.

அரியாலை கோஷ்டி இடைவேளைக்கு முன்பாகவே 2 கோல்களைப் பெற்றிருந்தது. இடைவேளையின்பின் இரு கோஷ்டிகளும் மிகப்பலமாக மோதிய போதிலும், யுத்தவுன்ஸில் கோஷ்டி ஆக ஒரு கோலைமட்டுமே பெற்றிருந்தது.

ஆட்டம் முடிவடையும் போது அரியாலைக் கோஷ்டி 2—1கோல்களால் யுத்தவுன்ஸில் கோஷ்டியைத் தோற்கடித்தது. (தே.நி)

......

## கலைத்தமிழ்கழக நிர்வாகிகள்

குருநகர்.வியா.

நல்லூர் கலைத்தமிழ் கழகத்தின் வருடாந்த பொதுக் கூட்டம் கழக படிப்பகத்தில் நடைபெற்றது. புது வருட நிர்வாகிகளாக பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர்: சி. அமிர்தலிங்கம், உபதலைவர்: ந சிதம்பரநாதன், செயலாளர் ப தருமரத்தினம், உபசெயலாளர்: கா. முத்துக்கிருஷ்ணன், பொருளாளர்: மா. மதியாபரணம், படிப்பகப் பொறுப்பாளராக வி. ஸ்ரீ காந்தராசாவும், கழக பத்திரிகாசிரியராக ந. சிதம்பரநாதனும் தெரிவு செய்யப்பட்டனர். 6பேர் கொண்ட செயற்குழுவும் தெரிவுசெய்யப்பட்டது.

## 'ஒழுக்கம் தரும் பயன்'

அரியாலை வியாழன்

'ஒழுக்கம் ஒருவனுக்கு இம்மையில் சகல செல்வங்களையும் அளிப்பதுடன் அவனுக்கு அது மறுமையில் முத்தியையும் தருவதாகும். நிலைக்கண்ணாடி முன் நின்று நாம் எதைச் செய்தாலும் அச்செயல்களையே கண்ணாடி காட்டுதல் போன்று உலக மக்களிடம் நாம் அன்பு பாராட்டினால் அவர்களும் பதிலுக்கு எமக்கு அன்பு காட்டுவார்கள்'

மேற்கண்டவாறு நல்லூர் கைலாசபிள்ளையார் கோவில் மண்டபத்தில் பண்டிதர் இரா. சிவசுப்பிரமணியம் பேசுகையில் கூறினார். அவர் மேலும் பேசுகையில் உலகிலே இதுவரை வாழ்ந்த அறிஞர்கள், பெரியார்களுடைய வாழ்க்கைச் சரித்திரத்தை நாம் படிக்கும் பொழுது அவர்களுடைய உயர்வுக்கு ஒழுக்கமே உறுதுணையாக இருந்தது என்பதைக் காணலாம் என்றார்.

——

## தண்ணீரின்றிக் கஷ்டம்

குருநகர், வியாழன்

காரைநகர் தெற்குக் கிராமசபைப் பகுதியில் உள்ள தோப்புக்காடுப்பகுதி மக்கள் குடிநீரின்றிக் கஷ்டமடைந்துவருவதாகவும் இப்பகுதியில் உள்ள பெண்கள் குடிநீர் எடுப்பதற்குச் சுமார் ஒன்றரை மைல் தூரம் நடந்து சென்று தண்ணீர் எடுத்துவரவேண்டிய கஷ்டம் இருந்து வருவதாகவும் இக்கஷ்டத்தை நீக்க நடவடிக்கை எடுக்குமாறும் தோப்புக்காடு கிராம முன்னேற்றச் சங்கம் தீவுப்பகுதிக்காரியாதிகாரிக்கும்சமூகசேவைப் பகுதி அதிபட்சருக்கும் வட்டுக்கோட்டைத்தொகுதி ஆட்சிமன்ற உறுப்பினருக்கும் மகஜர் அனுப்பியுள்ளது

......

## புதிய கல்வி அதிகாரி

ஊர்காவற்றுறை வியாழன்

கிளிநொச்சிப்பகுதி வட்டாரக் கல்வி அதிகாரியாக திரு. ரி. இராசலிங்கம் நியமிக்கப்பட்டுள்ளார். கிளிநொச்சிப் பகுதிக்கு திரு. இராசலிங்கத்தை நியமிக்குமாறு அகில இலங்கைச் சிறுபான்மைத் தமிழர் மகாசபை அரசாங்கத்தைக்கோரியிருந்ததுகுறிப்பிடத்தக்கது.

......

## ச. ச. நிலையத்தில் படிப்பகம்

குருநகர். வியாழன்

கோப்பாய் தெற்குசரஸ்வதி சனசமூக நிலையத்தின் பொதுக்கூட்டம் கோப்பாய் தெற்கு கிராம முன்னேற்றச் சங்க மண்டபத்தில் நடைபெற்றது. இந்த மண்டபத்தில் மேற்படி சனசமூக நிலையத்திற்கான படிப்பகத்தை கிராமசபைத் தலைவர் வி. பரமானந்தராசா திறந்து வைத்தார்.

புதுவருட நிர்வாகிகளாகப் பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டனர். தலைவர்: திரு. பொ சின்னத்துரை, உபதலைவர்: வே. சின்னத்துரை, செயலாளர்: ச பாலசிங்கம், உபசெயலாளர்: வி. குருகதாஸ். பொருளாளர்: செ கணேஸ் 6பேர் கொண்ட செயற்குழுவும் தெரிவுசெய்யப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழில் சிறப்பாக தீர்ப்பு எழுதிய நீதிபதிகளுக்கு பரிசு

சென்னை, ஜூன் 24

தமிழ் நாட்டில் தமிழ் மொழியில் சிறப்பானமுறையில் தீர்ப்புகளை எழுதிய இரு நீதிபதிகளுக்கு பரிசு வழங்கப்படுகின்றது.

தமிழிலேயே சிறந்தமுறையில் தீர்ப்புக்களை எழுதினால் சிவில் தீர்ப்புக்கு ரூபா 3 ஆயிரமும் கிரிமினல் தீர்ப்புக்கு ரூபா 2 ஆயிரமும் பரிசாக வழங்கப்படுமென்று தமிழக அரசு 1969-ம் ஆண்டில் அறிவித்திருந்தது.

இதைத் தொடர்ந்து 22 நீதிபதிகள் தமிழில் தீர்ப்புக்களை எழுதி அனுப்பினார்கள். இதில் 8 சிவில் வழக்கு தீர்ப்புக்களும் 4 கிரிமினல் வழக்குத் தீர்ப்புக்களும் போட்டிக்குத் தகுதியானவையாக ஏற்றுக்கொள்ளப்பட்டு இவைகளை ஒரு குழு பரிசீலித்தது. இதன்படி ஊட்டியில் உதவி நீதிபதியாகவிருக்கும் திரு. வி. சுப்பிரமணியம் சிறப்பாக சிவில் வழக்குத் தீர்ப்பு எழுதியவர் என்றும் சீர்காழியைச் சேர்ந்த சப்மாஜிஸ்திரேட் டி. சிவசிதம்பரம் சிறப்பாக கிரிமினல் வழக்குத் தீர்ப்பு எழுதியதாகவும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

## விவசாயிகள் கழகத்துக்கு பாராட்டு

குருநகர், வியாழன்

இளைஞர்கள் தாங்கள் எடுத்த கருமங்களைத் திறம்படச்செய்து முடிக்கும் ஆற்றலும் கடமை உணர்ச்சியும் உடையவர்களாக இருந்தால், அவர்கள் அங்கம் வகிக்கும் எந்த இயக்கமும் முன்னேறும் என்பதில் ஆச்சரியமில்லை. இதைச்செயலில் காட்டியுள்ள திருநெல்வேலி இளம் விவசாயிகள் கழகத்தை பாராட்டாமல் இருக்கமுடியாது என்று திருநெல்வேலி இளம் விவசாயிகள் கழகத்தின் 12-வது வருடாந்த பொதுக் கூட்டத்தில் உரையாற்றிய நல்லூர் கிராமசபைத் தலைவர் பொ. குமாரகுலசிங்கம் குறிப்பிட்டார்.

திருநெல்வேலி பலநோக்குக் கூட்டுறவுச்சங்க மேல்மாடியில் நடைபெற்ற இக்கூட்டத்திற்கு மேற்படி கழகத்தலைவி செல்வி சி. அருள்மணிதேவி தலைமை வகித்தார்.

கிராமசபைத் தலைவர் குமாரகுலசிங்கம் தொடர்ந்து பேசுகையில், ஒரு பெண்மணியின் தலைமையில் இயங்கும் இந்த விவசாயிகள் கழகம் வியக்கத்தக்க முறையில் விவசாயம் பரிசிக்களைப்பெற்று பல முன்னேற்றமான திட்டங்களை உருவாக்கி வருவது இக்கிராமத்திற்கே பெருமைதரக்கூடியது என்றார்.

விவசாய விசாலிப்பு உத்தியோகத்தர் வேசுதாசன், விவசாயப் போதனாசிரியர் குசைதாசன் ஆகியோரும் உரையாற்றினர்.

······

## சென். ஜோன்ஸ் கல்லூரி 150-வது ஆண்டு விழா கொண்டாட்டம்

யாழ்ப்பாணம், வெள்ளி

"சென். ஜோன்ஸ் கல்லூரி ஆரம்பமாகி இன்றுடன் 148 வருடங்கள் ஆகின்றன. 1973-ம் ஆண்டு இக்கல்லூரியின் 150-வது ஆண்டு பூர்த்தி விழா கொண்டாடப்படவிருக்கிறது. இந்த விழாவை நாட்டின் பல பகுதிகளிலுமுள்ள இக்கல்லூரியின் பழைய மாணவர்களும் விமரிசையாகக் கொண்டாட ஒத்துழைக்க வேண்டும்"

சுண்டிக்குளி சென். ஜோன்ஸ் கல்லூரியின் பரிசளிப்பு விழாவில் கல்லூரி அதிபர் திரு. பூரணம்பிள்ளை தனது அறிக்கையில் மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

இம்மாதம் 21ந் திகதி நடைபெற்ற இப்பரிசளிப்பு விழாவில் வண. பீற்றர் வாகனும் அவரது மனைவியும் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டார்கள்.

திரு. பூரணம்பிள்ளை தமது பேச்சில், சகலதுறைகளிலும் கல்லூரியின் வளர்ச்சி பற்றி எடுத்துக்கூறி அவ்வளர்ச்சிக்கு ஒத்துழைப்பு நல்கி உழைத்த ஆசிரியர்களுக்கும், பெற்றோருக்கும் நன்றி தெரிவித்தார்.

······

## நிறைவுவிழா

சுழிபுரம், வியாழன்

மாதகல் மயில்வாகனப் புலவர் சனசமூக நிலைய மூன்றாவது ஆண்டு நிறைவு விழா திரு. இ. நடராசலிங்கம் தலைமையில் நடைபெற்றது. பிரதம விருந்தினராக பண்டத்தரிப்பு ஆஸ்பத்திரி அதிபர் திரு. கே. தாமோதரம்பிள்ளை தம்பதிகள் கலந்துகொண்டனர். வண. பிதா எம். ஏ. சிங்கராயர் எம். சிவராஜரட்ணம், எஸ். மயில்வாகனம், வி. கணபதிப்பிள்ளை ஆகியோர் சொற்பொழிவு நிகழ்த்தினர். விளையாட்டுப்போட்டியில் வெற்றிபெற்றவர்களுக்கு திருமதி தாமோதரம்பிள்ளை பரிசுகள் வழங்கினார். கலைமகள் கலாமன்றத்தினரின் 'மகளே உனக்காக' என்னும் சமூக சீர்திருத்த நாடகம் மேடையேற்றப்பட்டது.

## சென். மைக்கல் சாம்பியன்

உரும்பராய், வியாழன்

இணுவில் 'துரை' ஞாபகார்த்த வெற்றிக்கிண்ணத்திற்காக நடைபெற்றுவந்த உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியின் இறுதிப்போட்டியில் உரும்பராய் சென். மைக்கேல் விளையாட்டுக் கழகமும் உரும்பராய், திருக்குமரன் விளையாட்டுக் கழகமும் மோதிக்கொண்டன. போட்டி இறுதியில் சென். மைக்கல் கோஷ்டி திருக்குமரன் கோஷ்டியை 4-2 கோல்களால் வெற்றியீட்டி துரை ஞாபகார்த்த வெற்றிக்கிண்ணத்தை சுவீகரித்து சாம்பியனானது.

இப்போட்டி உரும்பராய் இந்துக்கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது. திரு. எஸ். இராசேந்திரா மத்தியஸ்தராகவிருந்தார்.

······

## தற்கொலை

வல்வெட்டித்துறை, வியாழன்

துன்னாலை தெற்கைச் சேர்ந்த சின்னவன் வல்லிபுரம் (வயது 35) என்பவர் குடவத்தைப் பிள்ளையார் கோவிலுக்கு அண்மையிலுள்ள காணியில் இறந்துகிடக்கக் காணப்பட்டார். இவருக்கு அருகில் நச்சுத்திராவகப் போத்தல் ஒன்றும் கிடக்கக் காணப்பட்டதாம்.

இறந்தவரின் மனைவி சரஸ்வதி சாட்சியமளிக்கையில் தனது கணவர் வலகாலமாக நோய்நோயால் கஷ்டப்பட்டு வந்தாரெனக்கூறினார். விசாரணை நடத்திய மரண விசாரணை அதிகாரி திரு வி. பி சுந்தரலிங்கம் நச்சுத்திராவகம் அருந்தித் தற்கொலை செய்ததாகத் தீர்ப்பளித்தார்.

## மானிப்பாய் கி. ச. ஆட்சேபம்

குருநகர், வியா

மானிப்பாய் கோவிற்பற்று பகுதிக்கு நிறுவப்பட்டுள்ள பலநோக்கு கூட்டுறவுச்சமாசத்தில் வேலையாட்களைத் தெரிவுசெய்த முறைகள் சரியில்லையென்றும் நியமிக்கப்பட்டுள்ள வேலையாட்கள் இப்பகுதிக்கு அப்பாற்பட்ட பகுதிகளில் உள்ளவர்கள் என்றும் இந்த நியமனங்கள் மிக இரகசியமாக நடத்தப்பட்டுள்ளதால் இதுவிடயத்தில் உடன் நடவடிக்கை மேற்கொண்டு விசாரணை நடத்துமாறு கோரும்தீர்மானமொன்றை மானிப்பாய் பட்டினசபை நிறைவேற்றியுள்ளது.

மானிப்பாய் பி. ச. தலைவர் திரு சி. மார்க்கண்டு தலைமையில் 23-ம் திகதி நடைபெற்ற பட்டினசபையின் மாதாந்தக்கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட இத்தீர்மானத்தில் மேலும் கூறப்பட்டுள்ளதாவது:

இக் கோவிற்பற்றுப் பிரதேசத்தில் ஐந்து கிராமங்கள் உள்ளடங்கியிருக்கின்றன. அவையாவன: மானிப்பாய் நவாலி, ஆனைக்கோட்டை, சுதுமலை, சண்டிலிப்பாய் ஆகிய கிராமங்களாகும். இச் சங்கத்திற்கு நியமிக்கப்பட்ட நிர்வாகசபை அங்கத்தவர்களில் பெரும்பான்மையானோர் ஒரே இடத்திலிருந்து தெரிவு செய்யப்பட்டுள்ளனர். குறிப்பாக மானிப்பாய் வடக்கிலிருந்து நான்கு அங்கத்தவர்கள் இச்சபைக்கு தெரிவுசெய்யப்பட்டுள்ளனர். மற்றும் உத்தியோகபூர்வமான நியமனங்களை இச்சபை ஆட்சேபிக்கவில்லை. இருந்தும் மானிப்பாய் வடக்கிலிருந்து ஓர் உத்தியோகத்தரும் மூன்று கௌரவ அங்கத்தவர்களும் நியமிக்கப்பட்டுள்ளனர். இதுகாரணமாக மற்றும் நான்கு கிராமங்களும் புறக்கணிக்கப்பட்டுவிட்டன. எனவே இக் கிராமசபைப் பிரதேசத்திற்குட்பட்ட நான்கு கிராமங்களாகிய சுதுமலை, ஆனைக்கோட்டை நவாலி, சண்டிலிப்பாய் மக்களின் சார்பில் நான் இதை அமைச்சரின் உடனடிக் கவனத்துக்கு கொண்டுவரவிரும்புகின்றேன்.

······

## தமிழ் நாடு...

(3-ம்பக்கத்தொடர்ச்சி)

கப் படாதவாறு நடவடிக்கைகளைத் தொடர்ந்து மேற்கொள்ளுவதே அனைத்துக் கட்சிகளின் தலைவர்களின் நோக்கம் என்பதையும் இக்கூட்டம் சுட்டிக்காட்டுகிறது. கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவுகளை நிருபர்களுக்கு முதலமைச்சர் கூறிய பின் முதலமைச்சரிடம் நிருபர்கள் கேட்ட கேள்விகளும் முதலமைச்சர் அளித்த பதில்களின் விபரம் வருமாறு:

கே: கண்டன நாள் கூட்டங்கள் போடுவதால் இப்பிரச்சினை தீர்ந்துவிடுமா- ஏதாவது போராட்டம் போன்றவை இருக்குமா?

ப: இதுவே ஒருமாதிரியான போராட்டம் தானே?

கே: மைசூர் மாநிலத்தில் நடைபெற இருக்கும் இடைத்தேர்தல் காரணமாக மத்திய அரசு இதில் ஏதும் செய்யாமல் இருக்கிறதா?

ப: தமிழர்களின் நலனை அரசியல் காரணத்திற்காக மத்திய அரசு விட்டுவிடாது என நம்புகிறேன்.

கே: இப்பிரச்சினை சம்பந்தமாக மேலும் வேறு நடவடிக்கைகள் எடுக்கப்படுமா?

ப: இது முதல் நடவடிக்கை. அடுத்த நடவடிக்கை பற்றி யோசிக்கப் படும்.

கே: மத்திய அரசாங்கம் இப்பொழுது எப்படி இருக்கிறது?

ப: பலம் அதிகமாக உள்ளது.

கே: தமிழ் நாட்டை அணுகும் முறையில் மத்திய அரசின் போக்கு எப்படி இருக்கிறது?

ப: இதைப் பொறுத்துக் கணக்கிடலாம்.

## இன்று நன்கொடை கையளிப்பு

ஒட்டுசுட்டான், வெள்ளி

ஒட்டுசுட்டான் சிவசக்தி சனசமூகநிலையத்தின் கைப்பந்தாட்டக் கோஷ்டியினருக்கு விளையாட்டுத்துறை அமைச்சின் விளையாட்டு உபகரண நன்கொடை, வவுனியா வடக்குக் காரியாதிகாரியால் இன்று கையளிக்கப்படவிருக்கிறது.

ஒட்டுசுட்டான் கி. ச. தலைவர் திரு. சி. கு. சிவராசா தலைமையில் நடைபெறும் இவ்வைபவத்தில் வவுனியா மாவட்டப் பிரதம விளையாட்டுப் பரிசோதகர் திரு. ஏ. துரைராசா பிரதமவிருந்தினராகக் கலந்துகொள்வார்.

······

## மரந்தன் சங்கம் கையேற்கப்பட்டது

வல்வெட்டித்துறை, வியா

மரந்தன் கூட்டுறவு இலாகாவினர் கடந்த வாரம் பூநகரி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தைக் கையேற்றனர். அடுத்த மாதம் 4-ந் திகதி துணுக்காய் பலநோக்கு கூட்டுறவுச் சங்கத்தை பொறுப்பேற்க இருக்கின்றனர்.

······

## தேனீ வளர்ப்பு பயிற்சி

குருநகர், வியா.

திருநெல்வேலி இளைஞர் விவசாயக்கழக உறுப்பினர்களுக்கு தேனீ வளர்க்கும் முறைகள் பற்றி பயிற்சி வகுப்புகள் நடத்தப்பட்டு வருகின்றன. இவ்வகுப்புகளை இளைஞர்விவசாயக் கழகப் போதனாசிரியர் எஸ். சிறீஸ்கந்தராசா, யாழ்ப்பாணப் பகுதி விவசாயப் போதனாசிரியர் கதிரமலைநாதன் ஆகியோர் நடத்துகின்றனர்.

இப் பயிற்சி திருநெல்வேலி விவசாய விஸ்தரிப்பு நிலைய மண்டபத்தில் நடைபெறுகிறது.

······

## ஸ்ரீ பிரகாசா காலமானார்

புதுடில்லி, ஜூன் 24

முன்னாள் தமிழ்நாடு கவர்னராகவிருந்தவரான ஸ்ரீபிரகாசா நேற்று வாரணாசியில் காலமானார்.

சிறந்த பத்திரிகையாளரான ஸ்ரீபிரகாசா மகாராஷ்டிரத்திலும் கவர்னராகப் பதவிவகித்திருக்கிறார்.

1946-ல் அவர் அரசியல் நிர்ணய சபையில் ஓர் அங்கத்தவராக இருந்தார். 1947-49-ல் பாகிஸ்தானில் இந்தியத் தூதராகவிருந்தார். 1950-52-ல் மத்திய மந்திரியாகவிருந்தார்.

1957-ம் ஆண்டில் ஸ்ரீபிரகாசாவுக்கு பத்மவிபூஷன் விருது வழங்கப்பட்டது. காசிவித்தியா பீடத்தின் தலைவராகவும் அவர் இருந்து வந்தார்.

······

## தொல்புரம் கிழக்கின் முன்மாதிரி

சுழிபுரம், வியா

தொல்புரம் கிழக்குப்பகுதியிலுள்ள பகிரங்க ஒழுங்கைகளை அவ்விடத்தைச் சேர்ந்த பொதுமக்கள் தமது சொந்தச் செலவில் செப்பனிட்டு வருகின்றனர். கிடங்கு குழிகள் கல்போட்டு மூடப்பட்டு மக்கியும் மணலும் பரவி ஒழுங்கைகள் சீரமைக்கப்படுகின்றன. பொதுமக்களின் இச்செயலால் சுழிபுரம் கிராம சபைக்குப் பெரிதும் செலவும் சிரமமும் குறைந்துள்ளது குறிப்பிடத்தக்கது.

## ஐரோப்பிய பொதுச்சந்தையில் பிரிட்டன்?

லண்டன், ஜூன். 24

லக்ஸம் பேர்க்கில் நடைபெற்ற பேச்சுக்களின் பெறுபேறுகள் பற்றி பிரிட்டிஷ் அமைச்சர்களுக்கு இன்று பிரிட்டிஷ் பிரதிநிதி விளக்கிக்கூறவிருக்கிறார்.

ஐரோப்பிய பொதுச்சந்தையில் பிரிட்டன் சேர்ந்து கொள்வது சம்பந்தமான பேச்சுவார்த்தைகள் வெற்றிகரமாக முடிவுற்றிருப்பதாக கூறப்படுகின்றது. இப்பேச்சுக்களின் முடிவுகள் பற்றி பிரிட்டிஷ் பார்லிமெண்டுக்கு விளக்குவதற்கான அறிக்கையொன்றை பிரிட்டிஷ் மந்திரிசபை தயாரித்து வருகின்றது.

## கி. பாக். பற்றி இஸ்ரேலிய அமைச்சர்

டெல்அவிவ், ஜூன். 24

கிழக்குப்பாகிஸ்தானில் இடம் பெறும் நிகழ்ச்சிகள் பயங்கரமானவை என்று இஸ்ரேலிய வெளிஉறவு அமைச்சர் திரு அபா இபான் குறிப்பிட்டிருக்கிறார். கிழக்குப்பாகிஸ்தான் நிலைமைபற்றி இஸ்ரேலிய தலைவர்கள் அபிப்பிராயம் தெரிவித்திருப்பது இதுவே முதல் தடவையாகும்.

## உளவுபார்த்த சார்ஜன்டுக்கு தண்டனை

லண்டன், ஜூன் 24

உளவுபார்த்த குற்றத்துக்காக முன்னாள் பிரிட்டிஷ் விமானப்படை சார்ஜன்ட் ஒருவருக்கு 5 வருடச் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

இவர் செக்கோஸ்லவாக்கியாவுக்காக உளவு பார்த்ததாக கைது செய்யப்பட்டிருந்தார்.

## உற்சவம்

உடுப்பிட்டி, வியாழன்

கரவெட்டி கிழக்கு கிழவிதோட்டம் பிள்ளையார் கோவில் வருடாந்த உற்சவம் எதிர்வரும் 30-ம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவிருக்கிறது. அடுத்த மாதம் 8-ம் திகதி ரதோற்சவமும், 9-ம் திகதி தீர்த்தோற்சவமும் நடைபெறும்.

0 0 0

வருகிற செவ்வாய்க்கிழமை கோப்பாய் வெள்ளெருவைப் பிள்ளையார் கோவில் கொடியேற்றவிழா ஆரம்பமாகவிருக்கிறது. விழாக்கள் பத்துநாட்கள் தொடர்ந்து நடைபெறும். ஒன்பதாம் நாள் இரதோற்சவமும், பத்தாம் நாள் தீர்த்தோற்சவமும் இடம்பெறும்.

## நிர்வாகிகள்

யாழ்ப்பாணம், வெள்ளி

கோப்பாய் தெற்கு விளையாட்டரங்க வீதியில் இருக்கும் சனசமூக நிலையக்கட்டடத்தை திரு. ஸ்ரீ பரமானந்தராசா அண்மையில் திறந்துவைத்தார். இக்கூட்டத்தில் சனசமூக நிலைய நடப்புவருட நிர்வாகிகளாக பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர் திரு. மா. சின்னத்துரை, உபதலைவர் திரு. வே. சின்னத்துரை, காரியதரிசி திரு. ச. பாலசிங்கம், உபகாரியதரிசி திரு. வி. குருகுலதாஸ், தனாதிகாரி திரு. செ. கணேசு. மேலும் ஆறுபேர் கொண்ட செயற்குழு ஒன்றும் தெரிவு செய்யப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**மணிவாக்கு**

ஜீவர்களை மனம் நோகப் பேசாமலிருத்தலும், பேரன்போடு கூடிய உண்மை மொழிகளைக் கூறுதலும் வேதாகமங்களை ஓதுதலும் வாக்கினால் செய்யத்தகுந்த தவமாகும். —கீதை


# ஈழநாடு

Eelanadu National Tamil Daily
Telegrams: "EELANADU" Jaffna
Post Box: 49 Jaffna Telephone: 389

விரோதிகிருது வருஷம் ஆனிமாதம் 11-ந் திகதி (25-6-71)


## ஆங்கிலத்தின் முக்கியம்

ஓய்வுபெற்ற ஆங்கில ஆசிரியர்கள் மீண்டும் சேவைக்கு அழைக்கப்பட்டுள்ளனர். ஆங்கிலம் போதிப்பதற்கு ஆங்கில மூலம் கல்விகற்றவர்களிடமிருந்து விண்ணப்பங்களும் கோரப்பட்டுள்ளன. ஆங்கிலக் கல்வியளிப்பதற்குத் துரித நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருவதையே இது குறிக்கின்றது. கடந்த சில ஆண்டுகளாக ஆட்சி பீடத்துக்கு வந்த அரசாங்கங்கள் ஆங்கிலக்கல்வி போதனை சம்பந்தமாகத் திட்டவட்டமான கொள்கை எதையும் உருவாக்க முடியாமல் கண்ணாமூச்சி விளையாடி வந்ததாகவே தோன்றியது. இது மாணவர்களுக்குமட்டுமல்ல கல்வித்துறைக்கே குழப்பத்தை ஏற்படுத்தியது. இப்பொழுது ஆங்கிலக் கல்வியின் தரத்தை உயர்த்துவதற்குக்கல்வி அமைச்சு எடுக்கும் நடவடிக்கைகள், உருவாக்கும் திட்டங்கள் ஆறுதலும் நம்பிக்கையுமளிப்பனவாகும்.

**தணிக்கை செய்யப்பட்டது**

கல்வி பற்றிப் புனராலோசனை செய்வதற்கு இதுதான் தகுந்த சமயம் என்பதைப் பலரும் ஒப்புக்கொண்டுள்ளனர். உண்மையில் இதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுவிட்டன. கல்வியை மட்டும் கருத்திற்கொண்டு கட்சிமற்றும் வேறுபாடுகளுக்கு இடம் வைக்காமல் கல்விப்புனரமைப்பில் சம்பந்தப்பட்டவர்கள் ஈடுபடுவார்களென்று எதிர்பார்ப்போம். இதில் ஆங்கில போதனை முக்கியமான பிரச்னை. ஆங்கிலம் அப்போது, எந்தவயதில், என்னமுறையில் போதிக்கப்படவேண்டுமென்பதும் எப்படியான ஆசிரியர்கள் இதைப் போதிக்க வேண்டுமென்பதும் முக்கியமான கேள்விகள். இக்கேள்விகளுக்கு மாறி மாறி ஆட்சிபீடத்துக்கு வந்த அரசாங்கங்கள் பதில் கூறிவந்திருக்கின்றன. ஆயினும் இப்பதில்கள் பிள்ளைகளைப் பரிசோதனைக் கருவிகளாக்கியிருக்கின்றனவேதவிர பயனெதையும் ஏற்படுத்தவில்லை. இதன் விளைவு தான் இந்த முக்கியபிரச்னை இன்று குழப்பமான நிலையிலிருப்பதற்குக் காரணம்.

எங்கள் பாடசாலைகளில் ஆங்கிலக்கல்விப் போதனை திருப்திகரமாக அளிக்கப்படவில்லை. ஆங்கிலக் கல்விப் போதனைக்குச் சரியான திட்டமிடாமையும் மாணவர்கள் ஆங்கிலத்தைச் சரியாக விளங்கிக் கொள்ளாமையும் கல்வியின்தரம் நம்நாட்டில் குறைந்ததற்கு முக்கிய காரணம் என்று சொல்லலாம்.

**தணிக்கை செய்யப்பட்டது**

இலங்கையைப் பொறுத்தவரையில் ஆங்கிலம் இரண்டாவது மொழியை விட முக்கியமானது. வாழும் மொழியான ஆங்கிலத்தைப் பயிலுவதற்கு ஆங்கிலப் போதனைத் திட்டமும் ஆங்கில பாடப் புத்தகம் ஆகிய அடிப்படைத் தேவைகளில் பற்றாக் குறைகள் இடையூறாக இருப்பதும் உண்மையாகும். படிப்பு அவசியமான வாழ்க்கையின் எந்தத் துறையிலும் திறமையடைவதற்கு ஆங்கிலம் தேவை. எனவே நம் நாட்டில் ஆங்கிலக் கல்விப் போதனை முழுமையாக வெற்றி பெறுவதற்கு உடனடியாக வழிவகைகள் காண வேண்டியது அவசியமாகின்றன.

இன்று இலங்கையில் இரண்டுவிதமான சந்ததியினருக்கிடையில் இடைவெளியிருக்கிறது. ஒன்று சுயமொழியில் கல்விகற்கும் மாணவனுக்கும் கல்வியறிவில்லாத அவனது பெற்றோருக்குமிடையேயுள்ள இடைவெளி. மற்றது ஆங்கிலத்தில் கல்வி கற்ற அதேசமயம் அறிவும் உணர்வும் நிறைந்த ஆசிரியருக்கும் ஆங்கிலம் தெரியாத மாணவனுக்குமுள்ள இடைவெளி.

பாடசாலைகளிலென்றாலும், பல்கலைக்கழகங்களிலென்றாலும் கல்வியில் எங்களுக்கு ஏற்பட்ட கேடுகளுக்கு இந்த இரண்டுவிதமான சந்ததியினருக்கிடையேயுள்ள இடைவெளிதான் பெரும்பாலும் காரணமாகும். சரியான திட்டமிட்டு, கொள்கையை உருவாக்கி அதை திறமையான முறையில் அமுல் செய்தால், அமைதி குலைந்த எங்கள் இளைஞர்களை ஆக்கவழியில் திருப்புவதற்குப் பயன் கிடைப்பது நிச்சயம்.

தணிக்கை அதிகாரியினால் தணிக்கை செய்யப்பட்ட பின் இத்தலையங்கம் பிரசுரமாகிறது.

## பிரபல கல்விமான் காலமானார்

பிரபல குடும்பத்தைச் சேர்ந்தவரும் கொழும்பு ஆனந்தாக்கல்லூரி அதிபருமான பிரபல கல்விமான் திரு. எஸ் ஏ விஜயதிலகா காலமானார்.

இவர் நீதியரசர் எல் ஆர் விஜயதிலகாவின் சகோதரர் திரு. விஜயதிலகா "பௌத்தர்" என்ற சஞ்சிகையில் இணை ஆசிரியராகக் கடமை புரிந்தவர். ஆங்கிலத்திலும் லத்தீனிலும் சிறந்த புலமை பெற்றவர், சிறந்த ஆசிரியர்.

அரசியலில் வகுப்புவாதத்தை எதிர்த்ததோடு தேசிய ஒருமைப்பாட்டுக்காக அயராது உழைத்து வந்தார். நீதியானதும் நேர்மையானதுமான எக்கருத்தையும் எவரிடத்தும் தயங்காது சொல்லும் துணிபுடையவர்.

## ஐயாறன்

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

இன்றும் கூட சொல்லிக்கொண்டிருக்கின்றன. தேர்தலில் தோற்றவர்கள் வென்றவருடன் கைகுலுக்கி நட்புக் கொண்டாடினாலும் இந்தச் சுவர்கள் பழைய விரோதத்தை வளர்ப்பதாகவுள்ளன. ஊரின் அழகு கெடுகிறது. மக்களிடையே ஒற்றுமை எண்ணங்கள் வளர முடியாமல் இவைகள் பிளவுகளுக்கு தூபம் போட்டு வருகின்றன.

இந்தக் கனராவியைப் பார்த்ததும் இலங்கை இவ்விடயமாகக் காட்டும் ஒரு முன்மாதிரியை அங்கு சில நண்பர்களிடம் தெரிவித்தேன். தேர்தலில் சுவரொட்டிகள் ஒட்டப்படாது. ஊர்வலங்கள் நடத்தப்படாது, கொடிகள் ஏற்றப்படாது என்று இங்கு எல்லாக் கட்சித் தலைவர்களும் சேர்ந்து ஒப்புக்கொண்டு சட்டமும் நிறைவேற்றி அமுல் செய்வதை எடுத்துக் கூறி தேர்தல் நடந்த சிறு அடையாளத்தையும் கூட இலங்கையில் காண முடியாதென்று சொன்னதும் அவர்களால் நம்ப முடியவில்லை. ஊரில் எங்கு பார்த்தாலும் தேர்தல் கட்சிப் பிணக்குகளைத்தான் காணமுடிகிறது. வெளிநாட்டு யாத்திரிகர்கள் வந்து பார்ப்பின் என்ன நினைப்பர். தேர்தல் போட்டிகளையும் கட்சிப் பிணக்குகளையும் மறக்க விடாமல் எப்போதும் நினைவு படுத்திக் கொண்டு மக்கள் மனதில் ஒற்றுமையும் அமைதியும் இல்லாமற் செய்கின்றன.

மேலும் சுவர்களில் இப்படி எழுத அதிக பணச் செலவாகும். யார் அதிகம் செலவிடுகிறார்களோ அவர்களுக்கே அதிக பிரசாரம் கிடைக்கக்கூடியதாகவுள்ளது. தேர்தல் செலவுகளும் அதிகமாகின்றன. தேர்தல் காலத்தில் பல ஏழைகளுக்குப் பிழைப்புக் கிடைக்கும் தான். ஆனால் இதனால் ஏற்படும் பாதகங்களைப் பார்ப்பின் இலங்கையில் செய்துள்ள சீர்திருத்தம் எவ்வளவு வரவேற்கத்தக்கதென்பதை உணரக்கூடியதாகவுள்ளது.

இதுமட்டுமல்ல திருவையாற்றிலே சுவாமி சந்நிதியில் நான்கு அரசியல் கட்சிகளின் கொடிகள் தான் சேர்ந்தாற்போல வெவ்வேறு கம்பங்களில் பறப்பதைப் பார்த்தேன். எல்லா ஊர்களிலும் பல சந்திகளிலும் கட்சிக்கொடிகள் தேர்தல் காலத்தில் மட்டுமல்லாமல் வருடமுழுதும் பறக்க விடப்பட்டுள்ளன. மக்களிடையே மனதில் ஒற்றுமை ஏற்பட முடியாதபடி இவை [illegible] யோசிப்பார் யாருமில்லைப் போலும்.

## தேடப்பட்டவர் பிடிபட்டார்

கோட்டை, வியாழன்: பயங்கரவாத நடவடிக்கைகளுக்கு உடந்தையாக இருந்து இதுவரை காலமும் பொலிசாரால் தேடப்பட்டு வந்த நபர் பிடிபட்டார்.

கடந்தவாரம் டி சியாது என்ற மேற்படி நபர் பொலிஸாரால் மருதானையில் வைத்து கைதுசெய்யப்பட்டார். இவர் 2,000 கைக்குண்டுகளைத் தயார் செய்து பயங்கரவாதிகளுக்குக் கொடுத்தார் என்றும் கைது செய்யப்பட்டபோது தம்முடன் நான்கு கைக்குண்டுகளும், அதற்கான உபகரணங்களும் வைத்திருந்தார் என்றும் தெரியவருகிறது.

பயங்கர வாதிகளுக்கு கைக்குண்டுகள் தயாரித்துக் கொடுத்துவந்த நபர் பிடிபட்டுள்ளதனால் அவர் யார் யாருக்கு கைக்குண்டுகள் வழங்கினர் என்ற பல தகவல்களையும் பொலிஸார் கண்டுபிடித்துள்ளனர்.

## யாழ்ப்பாணத்தில்

(1ம் பக்கத்தொடர்ச்சி)

தலைச்சுமர காணப்பட்டது. அவரது கையில் பச்சை அடையாளம் உண்டு. அந்தப் பச்சையில் கந்தசுவாமியார் வேலுடன் காணப்படுகிறார். இச்சடலத்தை அடையாளம் கண்டு கொள்ளக் கூடியவர்கள் சாவகச்சேரிப் பொலிசாருடன் உடனடியாக தொடர்பு கொள்ளுமாறு பொலிசார் கேட்டுக் கொண்டுள்ளனர்,

## அரசியல்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

நடவடிக்கையை எடுத்தது. தமிழர்கள் வர்த்தகம் சம்பந்தமாகத் தமிழ்மொழி மூலம் தொடர்புபடுத்தி நடத்துவதற்கு அனுமதிக்கப்படுவார்கள் என்று கூறினார். இந்தக் கருத்தையும் தமிழரசுக்கட்சி எதிர்த்து வந்திருக்கிறது இப்பொழுது கொண்டுவரப்பட்டிருக்கும் இந்த அடிப்படைத் தீர்மானமும் தமிழ் மக்களுக்கு அநீதி செய்வதே என்று கூறினார்

எல்லாச் சட்டங்களும் சிங்களத்திலும் தமிழிலும் ஆக்கப்பட வேண்டுமென்று தமிழரசுக்கட்சி திருத்தப் பிரேரணையில் தெரிவித்துள்ளது

## மகா கும்பாபிஷேகம்

மாவிட்டபுரம், வெள்ளி: நாயன்மார்க்கட்டு ஸ்ரீஇராஜராஜேஸ்வரி அம்பாள் ஆலய மகாகும்பாபிஷேகம் நேற்று ஆரம்பமாகி இம்மாதம் 30ம் திகதி வரை நடைபெற இருக்கிறது.

பல ஆயிரம் ரூபா செலவில் திருத்தியமைக்கப்பட்ட இவ்வாலய கும்பாபிஷேக விழாவை அகில இலங்கை சைவக் குருமார் அர்ச்சகர் சபை அங்கத்தவர்களான கிரியாவித்தகர் க சிவபாதசுந்தரக்குருக்கள், க சிவலோகநாதக் குருக்கள், தி. மாணிக்கவாசகக் குருக்கள், சைவத்திரு வை தியாகராசக் குருக்கள்; அ பாலசுந்தரக் குருக்கள் ஆகியோர் நடத்தி வருகிறார்கள்.

## "குடியற்றவருக்கு இந்தக் காணியை வழங்குக"

உடுப்பிட்டி, வியா: கரவெட்டி மேற்கு அம்பலன்வெளியிலுள்ள முடிக்குரிய நிலத்தில் குடியிருக்கக் காணியின்றி அவதியுறும் சிறுபான்மைச் சமூகத்தவர்களுக்கென வீடமைப்புத் திட்டமொன்றை உருவாக்கித்தரும்படி கோரும் மகஜரொன்றை உடுப்பிட்டித் தொகுதி கம்யூனிஸ்ட் வாலிபர் சங்க சம்மேளனம் வீடமைப்பு அமைச்சர் திரு. பீட்டர்கெனமனிடம்சமர்ப்பித்துள்ளது.

## சோனகதெரு கொட்டடி சம்பவத்தில் சமரசம்

யாழ்ப்பாணம், வெள்ளி: பெண்கடத்தல் சம்பவம் ஒன்றைத் தொடர்ந்து யாழ்ப்பாணம் சோனக தெரு கொட்டடிப் பகுதியில் இரு தரப்பினருக்கிடையில் தோன்றிய அமைதியின்மை வடபகுதிப் பொலிஸ் அதிபர் திரு ஆர். சுந்தரலிங்கம் கூட்டிய ஒரு மகாநாட்டில் சமரசமாகத் தீர்த்து வைக்கப்பட்டது. முதல்நாள் நடந்த சிறிய சம்பவங்களை மறந்து இருதரப்பினரும் வழமைபோல் ஒற்றுமையாக வாழ்வதற்கு உறுதி கொண்டனர்.

இருதரப்பினரும்தங்களுக்கிடையே ஏற்பட்ட தகராறுகளை சமரசமாகத்தீர்த்துக் கொண்டதால் பெண்கடத்தல் வழக்குத் தவிர வேறு வழக்குகள் எதையும் பொலிசார் தாக்கல் செய்யமாட்டார்கள்.

சோனகதெரு, வில்லூன்றிப் பகுதியில்இரண்டுதினங்கள் அமுல்படுத்தப்பட்ட தற்காலிக ஊரடங்கு உத்தரவு நீக்கப்பட்டு விட்டது. நாடு முழுவதிலுமுள்ளது போல் இப் பகுதிகளிலும் இரவு 10மணிமுதல் காலை 4 மணிவரையே ஊரடங்கு உத்தரவு அமுலிலிருக்கும்.

அப்பகுதிகளில் இனிமேல் எதுவித அசம்பாவித சம்பவங்களும் நடைபெறக்கூடாதென்று இரு தரப்பினரையும் பொலிசார் எச்சரித்தனர்.

இரு சமூகத்தவரின் தலைவர்களையும் மற்றும் இருதரப்பினரையும் சேர்ந்த பலரையும் யாழ்ப்பாணம் பொலிஸ் தலைமைக் காரியாலய இன்ஸ்பெக்டர் திரு என். பி. எச் விஜயரத்தின அழைத்துப் பேசினார்.

பிரச்னையில் சம்பந்தப்பட்ட இளைஞன் நாதனின் குடும்பத்துக்கு நூறுரூபாய் நஷ்டஈடாகக் கொடுத்ததும் அவர்கள் தாங்கள் இப்போதுள்ள இடத்தைக்காலி செய்யவும் குத்தகைப் பணமான ஆயிரம் ரூபாயைத் திருப்பிச் செலுத்தவும்(இது திருப்பிக் கொடுக்கப்பட்டது) சமரச மகாநாட்டில் ஒப்புக் கொள்ளப்பட்டது.

இம் மகாநாட்டில் திருவாளர்கள் எம் சி சுப்பிரமணியம் எஸ் நடராசா, பி மகாலிங்கம், ரி, தர்மலிங்கம், எஸ் சின்னவாரி, எம் ஏ சி, எஸ் ஏ காதர், எம், ஜி பஷீர், எஸ், எம், சுல்தான் எம் எஸ் முத்துமுகம்மது, ஏ எம் சலி ஆகியோருடன் இலங்கை கம்யூனிஸ்ட்கட்சி (மாஸ்கோ சார்பு) யைச் சேர்ந்த திரு ஆர் ஆர் பூபாலசிங்கம், இஸ்லாமிய சோஷலிச முன்னணியைச் சேர்ந்த ஜனாப் மீரான் சாஹிபும் கலந்து கொண்டனர்,


**தேவை**

நிர்வாக உதவியாளர் (Administrative Assistant) வயது 45க்கு மேற்பட்ட, தமிழ், ஆங்கில அறிவு, நிர்வாகம், கணக்கு அனுபவம் உடையவராய் இருத்தல் வேண்டும். தட்டெழுத்து அனுபவமும் விரும்பத்தக்கது. 1-7-71 பி. ப. 4-00 மணிக்கு முன் விண்ணப்பிக்கவும்: த. சிவலிங்கம், கௌரவ காரியதரிசி, தெல்லிப்பழை ஐக்கிய வைத்தியசாலை. 3810


இப்பத்திரிகை ஈழநாடு லிமிடெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் வெண்கோவில் மேற்கு வீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1971ம் ஆண்டு ஜூன் மாதம் 25-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org